விலை: 50.00
பக்கங்கள் : 16

website : www.valampurii.lk
viber : 076 636 3378

Registered as a Newspaper in Srilanka

# வலம்புரி
Valampurii

E-mail: valampurii@yahoo.com

சங்கு 24
ஒலி 257 வள்ளுவர் ஆண்டு 2054 ஆவணி 16 சனிக்கிழமை (02.09.2023) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829



கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை
T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.

kalyanamalai.jaffna@gmail.com
4000/=


## QR முறை நீக்கப்பட்டது

எரிசக்தி அமைச்சர்



7 ஆம் பக்கம் பார்க்க

## பேருந்து கட்டணம் அதிகரிப்பு



5 ஆம் பக்கம் பார்க்க

## 13ஐ ரணில் அமுலாக்கார்

மைத்திரி



3 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்.பேருந்து நிலையத்தில் இனி 24 மணி நேரமும் சேவை



6 ஆம் பக்கம் பார்க்க

## குருந்தூர்மலை சிங்கள - பௌத்த சொத்தாகும்

### புத்த சாசன அமைச்சர் விதுர



- குருந்தூர் விகாரையை எவரும் கேள்விக் குட்படுத்த முடியாது.
- குருந்தூரில் பௌத்தர்கள் சென்று வழி படுவதை எவரும் தடுக்க முடியாது.
- குருந்தூரை வைத்து அரசியல் செய்யும் அவசியம் சிங்கள, பௌத்தர்களுக்கு கிடையாது.

(03ஆம் பக்கம் பார்க்க)

## லிட்ரோ எரிவாயு விலையில் திருத்தம்

(கொழும்பு)

உள்நாட்டு எரிவாயு சிலிண்டரின் விலையில் திருத்தம் செய்யப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் தெரிவித்துள்ளது.

இதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை இந்தத் திருத்தம் மேற்கொள்ளப்படவுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனம் குறிப்பிட்டுள்ளது.

விலைச்சூத்திரத்தின்படியே இந்த திருத்தம் செய்யப்படுகிறது என்றும் நிறுவனம் மேலும் சுட்டிக்காட்டியுள்ளது. (ம்-7,9)

## உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில்

### 15 வயது சிறுவன் பலி வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, பூவரசங்குளம் பொலிஸ் பிரிவிற் குட்பட்ட மடுக்குளம் பகுதியில் உழவு இயந்திரம் குடைசாய்ந்ததில் 15 வயது சிறுவன் ஒருவர் மரணமடைந்துள்ளதுடன் மற்று 15

## யூனியன் கல்லூரிக்கு முன் கவனயீர்ப்பு ஆர்ப்பாட்டம்



15

## வடக்கு - கிழக்கில் குடிநீர் தேவையை பூர்த்தி செய்ய விசேட திட்டம்

### நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த

(கொழும்பு)

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக துரித, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைமைகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நீர் வழங்கல் இராஜாங்க அமைச்சர் சனத் நிஷாந்த தெரிவித்தார்.

ஜனாதிபதி ஊடக மையத்தில் நேற்று 15

## தென்னைச் செய்கை வடக்கில் பாரிய வீழ்ச்சி

### தென்னை அபிவிருத்தி சபையின் பிராந்திய முகாமையாளர்

(கிளிநொச்சி)

வட மாகாணத்தில்தென்னை செய்கையில் பாரிய வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதையடுத்து அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு பகுதிகளிலும் தென்னை செய் கையை மேற்கொள்ள 15

## கரடி தாக்கியதில் கண்ணை இழந்த குடும்பஸ்தர்

### வவுனியாவில் சம்பவம்

(வவுனியா)

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் கரடி தாக் கியதில் குடும்பஸ்தர் 15

## சிங்கப்பூர் ஜனாதிபதியாக யாழை பூர்வீகமாகக் கொண்ட தமிழன் தெரிவு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்ட தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் ஜனாதிபதித் தேர்தலில் 70 வீதத்துக்கு மேலான வாக்குகளை பெற்று ஜனாதி 15

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மலிவு விற்பனை

கடந்த 40 வருடங்களாக யாழ்.மக்களின் நன் மதிப்பைப் பெற்ற **SILVER SHIELD SOCKS** பாடசாலை மாணவர்களுக்கும் அரச உத்தியோகத்தர்களுக்கும் ஏற்ற நைலோன்/ கொட்டன் காலுறைகள் (SOCKS) மலிவு விலையில்

**மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக் கொள்ளவும்**

உலகெங்குமுள்ள உறவுகளிடமிருந்து ஒருசில நிமிடங்களில் உங்கள் பணத்தை

WESTERN UNION MONEY TRANSFER | Ria | MoneyGram. money transfer

ஊடாக பெற்றுக்கொள்ளவும். (C-7178)

**ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்**
**303, K.K.S வீதி, யாழ்ப்பாணம்.**
**021 222 5392, 076 315 6470**

## காணி விற்பனைக்கு

கோண்டாவில் மேற்கு ஸ்ரேசன் வீதியில் (காளி கோயிலுக்கும் கோண்டாவில் இந்து மகா வித்தியாலயத்திற்கும் இடையில்) 1 1/2 பரப்புக்களாக பிரிக்கப்பட்ட நிலையில் காணித்துண்டுகள் விற்பனைக்குண்டு. (16878)

**077 728 6061**

## மேலதிக மா.க.திணைக்களத்தின் பணிப்பாளர் நியமனம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணக் கல்வி வலயத்தில் பிரதிக் கல்விப் பணிப்பாளராக(நிர்வாகம்) கடமையாற்றிய திருமதி பிரதீபா காயத்திரி கஜபதி வடக்கு மாகாணக் கல்வித் திணைக்களத்தின் மேலதிக மாகாணக் கல்விப் பணிப்பாளராக நியமிக்கப்பட்டுள்ளார்.

இவருக்கான நியமனத்தை வடக்கு மாகாணப் பிரதம செயலாளர் வழங்கவுள்ளார். (ம)

## Flight Tickets Booking....

கனடா, லண்டன், பிரான்ஸ் மற்றும் ஏனைய நாடுகளுக்கான விமானப் பயணச்சீட்டு முன்பதிவுகள் மற்றும் Travel insurance களினை எம்மிடம் பெற்றுக்கொள்ளலாம். (16917)

**Apex Travels** - யாழ்ப்பாணம்
**077 759 7598**

## வேலையாள் தேவை

- மேசன் சம்பளம் 2500/-
- பெயின்ரர் 2000-2500 வரை

**சாரதி தேவை**

- ரைக்ரர் சாரதி

தொடர்பு : 8.00 Am - 5.00 Pm வரை (16916)

**077 210 0749**

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
076 636 3378
076 097 3127

## காணி விற்பனைக்கு உண்டு

**யாழ்ப்பாணம் கீரிமலை சிவன் கோவில் முன்பாக 24 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.**

- கீரிமலை நகுலேஸ்வரர் கோயிலில் இருந்து அளவெட்டி செல்லும் பிரதான காபெட் வீதி முகப்புடன்
- நகுலேஸ்வரர் மகா வித்தியாலயத்தில் இருந்து 250 m தூரம், நகுலேஸ்வரர் ஆலயம் 50 m தூரம், பிரதான பஸ்தரிப்பு நிலையம் 75 m தூரம்.
- செம்மண்காணி நன்நீர் ஊற்றுநிலம் வீடு கட்டுவதற்கும் வியாபார நிலையங்கள் அமைப்பதற்கும் உகந்த இடம் நல்ல சூழல்
- 3 பரப்பு ஆகவும் 2 பரப்பு ஆகவும் பிரிக்கப்பட்ட நிலையில் 18 அடி பாதையுடன் நிலப்பரப்பு
- பார்வையிடும் நேரம் : காலை 6.00 தொடக்கம் மாலை 6.00 மணி வரை

(16902)

தொடர்புகளுக்கு:- குரு
**076 755 8606,**
**077 874 3204, 077 288 0152**

## வேலையாட்கள் தேவை

- தொழிநுட்ப உத்தியோகத்தர் (TO)
- கணிய அளவியளாளர் (QS)

**Experience with Bill and BOQ preparing**

- தொழிநுட்ப உத்தியோகத்தர் மற்றும் கணிய அளவியளாளர் (Trainee)
- கணக்கு உதவியாளர் (Account Assistant)

தொடர்பு - 8.00 Am -5.30 Pm (16916)

**077 210 0749**
mail-bestbuilders1983@hotmail.com

## Win Repair

சகல விதமான குளிர்சாதனப் பெட்டிகளும், சலவை இயந்திரங்களும், A/C க்களும் உங்கள் இடத்திற்கே வந்து சிறந்த முறையில் திருத்தி கொடுக்கிறோம். (16915)

**076 906 4682**

## Romania வேலைவாய்ப்பு விசா


**Romania** நாட்டில் **Electrician** மற்றும் தொழிற்சாலை வேலைவாய்ப்புக்கள் உள்ளன. ஐரோப்பிய நாடுகளுக்கும் கனடாவிற்குமான Tour Visa தேவைப்படுபவர்கள் தொடர்புகொள்ளவும்.

**Hybrid International hub (pvt) Ltd, Jaffna**
(வேம்படி மகளீர் கல்லூரி அருகில்) (C-7177)

**021 222 1265,076 250 0098**

ஓம் விராட் விஸ்வப்பிரம்மனே நமஹ

## 31 ஆம் நாள் அந்தியேட்டி அழைப்பும் நன்றி நவிலலும்



தோற்றம் 06 . 05 . 1941

மறைவு 05 . 08 . 2023

கடந்த 05.08.2023 அன்று சிவபதமடைந்த எமது குடும்பத்தின் ஆணிவேர்

### அமரர் திருக்கேதாரம் சிவராசா

(ஓய்வுநிலை நிர்வாக உத்தியோகத்தர், வலயக்கல்வி அலுவலகம், வடமராட்சி)

அவர்களது சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் எதிர்வரும் 04.09.2023 திங்கட்கிழமை காலை 6.00 மணியளவில் தெணியம்மன் கோவில் அந்தியேட்டி மடத்தில் நடைபெறும். அந் நிகழ்விலும் அதனைத் தொடர்ந்து அன்னாரது இல்லத்தில் மு.ப 11.00 மணியளவில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் கலந்துகொண்டு அன்னாரது ஆத்மசாந்திக்காகப் பிரார்த்திப்பதோடு தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்து கொள்ளுமாறு தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

மேலும் அன்னாரின் பிரிவுச் செய்தி அறிந்து நேரில் வந்தும் தொலைபேசி ஊடாகவும் எமக்கு ஆறுதல் கூறியவர்களுக்கும் மற்றும் சமூக வலைத்தளம், துண்டுப்பிரசுரம், பனர்கள் மூலம் தமது அனுதாபங்களைப் பகிர்ந்தோருக்கும் இன்னும் பல்வேறு வழிகளிலும் உதவிய அயலவர், உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவருக்கும் எமது மனமார்ந்த நன்றிகளைத் தெரிவித்துக் கொள்கின்றோம்.

**இதனைத் தனிப்பட்ட அழைப்பாக ஏற்றுக்கொள்ளவும்**

தாமர் ஒழுங்கை,
புலோலி வடக்கு,
பருத்தித்துறை. (C-7179)

தகவல்:
குடும்பத்தினர்

## நாகபூஷணி திருமண சேவை

**MBBS, BSC Civil Engineering, BSC, MSC, LLM, IT Professionals, CIMA, BBA, MBA, BA**

கற்று வேலை செய்பவர்கள் மற்றும் Teachers, govt Jobs, உள்நாட்டு, வெளிநாட்டு மணமக்கள் எம்மிடம் ஏராளமாக உள்ளனர். மிகப் பொருத்தமான மணமக்கள் ஜாதகங்கள் எம்மால் தெரிவு செய்யப்பட்டு உடன் தரப்படும். (C-7174)

**264, ஆடியபாதம் வீதி,**
**கொக்குவில் கிழக்கு, யாழ்ப்பாணம்.**
**021 222 9306, 077 138 7596, 071 999 9306**

## Happy Supermarket - உரும்பிராய்

**உங்கள் இல்லங்களிற்கு தேவையான அத்தியாவசிய பொருட்களின் கொள்வனவுகளிற்கு Happy Supermarket உரும்பிராயினை நாடுங்கள்...**

| | | |
|---|---|---|
| 1 Kg வெள்ளை சீனி | - 249/= (max2Kg) | |
| 1 Kg கோதுமை மா | - 185/= | |
| 1 Kg Prima கோதுமை மா | - 197/= | |
| 1 Kg றவை | - 288/= | |
| 1 Kg தீட்டல் | - 180/= | |
| 1 Kg சிவப்பு பருப்பு | - 284/= (Max 2Kg) | |
| 400 g அங்கர் பால்மா | - 1050/= | ~~(1080/=)~~ |
| 01 அங்கர் யோக்கட் | - 50/= | ~~(80/-)~~ |
| 1 Kg சன்லைட் றோஸ் பவுடர் | - 360/= | ~~(430/=)~~ |
| 330g டிகிரி மாரி பிஸ்கட் | - 262/= | ~~(330/=)~~ |
| 01 சந்தூர் சவர்க்காரம் | - 140/= | ~~(175/=)~~ |

1050/-



~~1080/-~~

(16917)

தரமான பொருட்களை சிறந்த விலையில் கொள்வனவு செய்திடுங்கள். குறிப்பிட்ட திகதியில் பதிவிடப்பட்ட விலையில் பொருட்களை கொள்வனவு செய்யலாம்.

பலாலி வீதி,
உரும்பிராய் சந்தி.

**Happy Supermarket**
**0777 8080 30**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# குருந்தூர் மலை சிங்கள-பௌத்தர்களின் சொத்து இதனை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது

## முல்லைத்தீவு நீதிமன்றக் கட்டளை தொடர்பில் விதுர

(கொழும்பு)

**"குருந்தூர்மலை சிங்கள- பௌத்தர்களின் சொத்து. அங்குள்ள விகாரையை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. அங்கு பௌத்தர்கள் சென்று வழிபடுவதை எவரும் தடுக்க முடியாது." என புத்தசாசன, சமய மற்றும் கலாசார அலுவல்கள் அமைச்சர் விதுர விக்கிரமநாயக்க தெரிவித்தார்.**



குருந்தூர்மலை தொடர்பில் நீதிமன்றத்தால் வழங்கப்பட்ட கட்டளைகளைத் தொல்பொருள் திணைக்களப் பணிப்பாளர் நாயகம் சரிவரப் பின்பற்றாது உதாசீனம் செய்திருக்கின்றார் என முல்லைத்தீவு நீதிமன்றம் நேற்று முன்தினம் கட்டளை வழங்கியுள்ளது. அது குறித்துக் கேட்ட போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில்

குருந்தூர்மலை தொடர்பாகவோ அல்லது அங்குள்ள விகாரை குறித்தோ முல்லைத்தீவு நீதிவான் நீதிமன்றம் பிறப்பித்து வருகின்ற கட்டளைகள் - தீர்ப்புக்கள் தொடர்பில் என்னால் பதிலளிக்க முடியாது.

ஆனால், குருந்தூர்மலை சிங்கள பௌத்தர்களின் சொத்து. அங்குள்ள விகாரையை எவரும் கேள்விக்குட்படுத்த முடியாது. அங்கு பௌத்தர்கள் சென்று வழிபடுவதை எவரும் தடுக்க முடியாது. இந்த நிலைப்பாட்டில் நான் உறுதியாகவுள்ளேன்.

குருந்தூர்மலையை வைத்து அரசியல் செய்ய வேண்டிய அவசியம் சிங்கள பௌத்தர்களுக்குக் கிடையாது. ஆனால், குருந்தூர்மலையை வைத்து அரசியல் செய்வதைத் தமிழ் அரசியல்வாதிகள் உடனடியாக நிறுத்த வேண்டும்." என அவர் தெரிவித்தார். (நி-5)

# 13 ஆவது திருத்தத்தை முழுமையாக ரணிலும் அமுலாக்கமாட்டார்

## மைத்திரிபால ஆருடம்



(கொழும்பு)

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டத்தை முழுமையாக அமுல்படுத்துவதற்கு இந்த ஜனாதிபதியும் நடவடிக்கை எடுக்க மாட்டார் என்றே நான் நம்புகின்றேன் என ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் தலைவரும் முன்னாள் ஜனாதிபதியுமான மைத்திரிபால சிறிசேன தெரிவித்தார்.

அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியின் நிலைப்பாடு என்னவென்று எழுப்பப்பட்ட கேள்விக்குப் பதிலளிக்கையிலேயே மைத்திரிபால சிறிசேன இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறியதாவது,

"அரசமைப்பின் 13 ஆவது திருத்தச் சட்டம் தொடர்பில் எமது கட்சியின் நிலைப்பாட்டை அனுப்புமாறு ஜனாதிபதி செயலாளர் கோரி இருந்தார். அதற்கு நாம் பதில் கடிதம் அனுப்பினோம். முதலில் இது விடயம் தொடர்பில் அரசின் நிலைப்பாடு தெரியப்படுத்தப்பட வேண்டும் எனவும் அப்போது அதில் திருத்த வேண்டிய விடயங்கள், உள்ளடக்க வேண்டிய விடயங்கள் தொடர்பான கட்சியின் கருத்தை தெரிவிக்க முடியும் எனவும் சுட்டிக்காட்டியிருந்தோம்.

13 இல் உள்ள சில அதிகாரங்களை பகிர்வதில் பிரச்சினை இல்லை. பொலிஸ் அதிகாரம் தொடர்பில் சர்ச்சை உள்ளது. 7 ஜனாதிபதிகள் கைவைக்காத விடயத்தை இந்த ஜனாதிபதியும் செய்ய மாட்டார் (13 ஐ முழுமையாக அமுல்படுத்த மாட்டார்) என்றே நான் நம்புகின்றேன்." என அவர் தெரிவித்தார். (நி-5)

# கோர விபத்தில் சிக்கி தாயும் மகனும் பலி

(கொழும்பு)

வாகன விபத்தில் தாயும் மகனும் பரிதாபகரமாக உயிரிழந்துள்ளனர்.

இந்தச் சம்பவம் காலி, கபராதுவை பிரதேசத்தில் நேற்று முன்தினம் இரவு இடம் பெற்றுள்ளது.

ஹயஸ் வானும் மோட்டார் சைக்கிளும் நேருக்கு நேர் மோதியதில் இந்த விபத்து இடம்பெற்றுள்ளது. இதன்போது மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்ற 23 வயதுடைய இளைஞரும் பின் ஆசனத்தில் இருந்து பயணித்த அவருடைய தாயாரும் (வயது 51) உயிரிழந்துள்ளனர்.

ஹயஸ் வானின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளார் என்றும் விபத்து தொடர்பில் விசாரணைகளை மேற் கொண்டு வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். (நி-5)

# வட்டி வீதங்களைக் குறைக்காத வணிக வங்கிகள் - அசங்க சுட்டிக்காட்டு

(கொழும்பு)

இலங்கை மத்திய வங்கியின் உத்தரவுக்கு அமைய எந்தவொரு வணிக வங்கியும் வட்டிவீதத்தை குறைக்கவில்லை என குத்தகை மற்றும் கடன் தவணை செலுத்துநர்கள் சங்கத்தின் தலைவர் அசங்க ருவன் பொத்துபிட்டிய தெரிவித்தார்.

கொழும்பில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

வட்டி விகிதங்களைக் குறைப்பது தொடர்பான சுற்றறிக்கைகள் சில வர்த்தக வங்கிகளுக்கு கிடைக்கவில்லை.

அதற்கான பொறுப்பை மத்திய வங்கி ஆளுநரே ஏற்க வேண்டும் என அவர் தெரிவித்தார். (நி-5)

# இந்த ஆண்டின் முதல் பாதியில் மட்டும் 170,000 இற்கும் அதிகமானோர் வெளிநாட்டுக்கு

(கொழும்பு)

2023 ஆம் ஆண்டின் முதல் காலாண்டில் மாத்திரம் ஒரு இலட்சத்து 70 ஆயிரத்திற்கும் மேற்பட்டவர்கள் வேலை வாய்ப்பைப் பெறுவதற்காக வெளிநாட்டுக்கு சென்றுள்ளனர்.

ஜனவரி 1 ஆம் திகதி முதல் ஜூலை 31ஆம் திகதி வரையான காலப்பகுதியில் ஒரு இலட்சத்து 71ஆயிரத்து 15 இலங்கையர்கள் வெளிநாட்டு வேலை வாய்ப்பைப் பெற்று வெளியேறியுள்ளனர்.

இந்த ஆண்டு ஜூலை மாதத்தில் மட்டும் 24 ஆயிரத்து 578 பேர் வெளிநாட்டு வேலைக்குச் சென்றுள்ளனர் என தரவுகள் தெரிவிக்கின்றன.

இதேநேரம் 2022 இல் வெளிநாட்டு வேலைக்காக வெளியேறியவர்களின் மொத்த எண்ணிக்கை 3 இலட்சத்து 11 ஆயிரத்து 56 ஆகும். (நி-5)

# வாகனங்களை வாங்கும் போது அவதானமாக செயற்படுங்கள்

## பொலிஸார் எச்சரிக்கை

(கொழும்பு)

புதிய வாகனங்களை வாங்குகின்றவர்கள் மிகவும் எச்சரிக்கையாக இருக்குமாறு பொலிஸார் கேட்டுக் கொண்டுள்ளனர்.

புதிதாக வாகனங்களை இறக்குமதி செய்வதற்கு தடை விதிக்கப்பட்டுள்ள நிலையில், வாகன உதிரிப்பாகங்களை சட்டவிரோதமாக இறக்குமதி செய்து அவற்றை வைத்து உள்நாட்டில் தரமற்ற வாகனங்களாக ஒழுங்கமைத்து அவை போலி ஆவணங்களுடன் விற்பனை செய்யப்பட்டு வருகின்றன.

அவ்வாறு விற்பனைக்கு தயாராக வைக்கப்பட்டிருந்த இரண்டு ஜீப் ரக வண்டிகள் குருணாகல் பகுதியில் வைத்து பொலிஸாரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

இவ்வாறு குருணாகல் பகுதியில் கோடீஸ்வர வர்த்தகர் ஒருவர் இந்த வாகனங்களை கொள்கலன் ஒன்றில் இலங்கைக்கு இறக்குமதி செய்திருப்பதாக பொலிஸாருக்கு தகவல் கிடைத்துள்ளது.

அந்த வாகனங்களுக்கான அனைத்து ஆவணங்களுமே போலியானவை என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். இந் நிலையிலேயே பொலிஸார் வாகனங்களை வாங்குவோருக்கு எச்சரிக்கை விடுத்துள்ளனர். (நி-5)

# முச்சக்கரவண்டிக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது

## முச்சக்கரவண்டியாளர் சங்கம்

(கொழும்பு)

எரிபொருள் விலை அதிகரித்த போதிலும், முச்சக்கரவண்டிகளின் பயணக் கட்டணம் அதிகரிக்கப்பட மாட்டாது என அகில இலங்கை முச்சக்கரவண்டியாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

இதேவேளை கட்டண அதிகரிப்பானது பொருளாதார நெருக்கடிக்கு முகங்கொடுத்துள்ள மக்களை மேலும் அசௌகரியப்படுத்தக்கூடும் என அந்த சங்கம் தெரிவித்துள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரச அதிபர் வெற்றிக்கிண்ண சதுரங்க போட்டி
# பூநகரி பிரதேச செயலக ஆண், பெண் அணிகள் வெற்றி





2023 அரச அதிர் வெற்றிக்கிண்ண சதுரங்க போட்டியில் பூநகரி பிரதேச செயலக ஆண், பெண் இரு அணிகளும் வெற்றியை தமதாக்கிக் கொண்டன.

நடப்பாண்டுக்கான கிளிநொச்சி மாவட்ட அரச அதிபர் வெற்றிக் கிண்ண சுற்றுப் போட்டிகள் கடந்த செவ்வாய்க்கிழமை ஆரம்பித்து தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

அந்தவகையில் நேற்று முன்தினம் இடம்பெற்ற சதுரங்க போட்டியின் ஆரம்ப நிகழ்வில் மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி.றூபவதி கேதீஸ்வரன் கலந்து கொண்டு போட்டியினை ஆரம்பித்து வைத்தார்.

அந்தவகையில் நேற்று நடைபெற்று முடிந்த சதுரங்க போட்டியில் ஆண்கள் பிரிவில் பூநகரி பிரதேச செயலக அணி சம்பியனாகியது.

2 ஆம் நிலையினை கண்டாவளை பிரதேச செயலக அணியும் 3 ஆம் நிலையினை நீர்ப்பாசனதிணைக்கள அணியும் பெற்றுக் கொண்டன.

பெண்கள் அணி பங்குபற்றிய இதே போட்டியில் முதல்நிலையினை பூநகரி பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்ட்து. 2 ஆம் நிலையினை மாவட்டச்செயலக அணி பெற்றுக்கொண்டது. 3 ஆம் நிலையினை கரைச்சி பிரதேச செயலக அணி பெற்றுக்கொண்டது.

கிளிநொச்சி மாவட்ட செயலக ஊழியர் நலன்புரி சங்கத்தின் ஏற்பாட்டில் இடம் பெறுகின்ற இப்போட்டித் தொடரில் மாவட்ட செயலக, பிரதேச செயலக அணிகள் மற்றும் வேறு திணைக்கள அணிகள் உள்ளடங்கலாக 19 அணிகள் பங்குபற்றுகின்றன. இப்போட்டித் தொடரில் 13 வகையான விளையாட்டுக்கள் இடம்பெறவுள்ளன.

குறித்த விளையாட்டுப் போட்டி ஊடாக உத்தியோகத்தர்களின் திறமைகளை இனங்காணல், உடல், உள ஆரோக்கியத்தை மேம்படுத்தல் மற்றும் திணைக்கள உத்தியோகத்தர்களிடையே பரஸ்பர தொடர்புகளை உருவாக்குதல் போன்ற நோக்கங்கள் எதிர்பார்க்கப்படுகிறது.

இந் நிகழ்வில் மாவட்டச் செயலக பதவிநிலை உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக கிளைத்தலைவர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலகங்களின் விளையாட்டு பிரிவின் உத்தியோகத்தர்கள், துறைசார்ந்த உத்தியோகத்தர்கள், போட்டியாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர். (4-6-316)

# ஆசிய கிண்ண கிரிக்கெட் தொடர்
# பங்களாதேஷை வீழ்த்தியது இலங்கை



2023 ஆம் ஆண்டுக்கான ஆசிய கிண்ண தொடரின் 2 ஆவது போட்டியில் இலங்கை அணி 5 விக்கெட்டுக்களால் வெற்றி பெற்றுள்ளது.

பல்லேகல மைதானத்தில் நடைபெற்ற இந்தப் போட்டியில் நாணய சுழற்சியை வென்ற பங்களாதேஷ் அணி முதலில் துடுப்பெடுத்தாட முடிவு செய்தது. அதன்படி முதலில் களம் இறங்கிய பங்களாதேஷ் அணி, இலங்கை அணியின் பந்துவீச்சாளர்களுக்கு எதிராக சிறப்பான முறையில் துடுப்பெடுத்தாட முடியவில்லை.

இதனால் பங்களாதேஷ் அணி 42.4 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 164 ஓட்டங்களை மட்டுமே பெற்றது.

பங்களாதேஷ் அணி சார்பில் அதிகபட்சமாக நஜ்முல் ஹுசைன் 89 ஓட்டங்களை பெற்றார். இலங்கை அணி சார்பில் மதீஷ பதிரன 4 விக்கெட்டுக்களை வீழ்த்தியிருந்தார்.

இதன்பின்னர் பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 39 ஓவர்களில் நிறைவில் 5 விக்கெட்டுகளை இழந்து வெற்றியிலக்கை அடைந்தது.

இலங்கை அணி சார்பில் அதிகபட்சமாக சரித் அசலங்க 62 ஓட்டங்களை ஆட்டமிழக்காமல் பெற்றதுடன், சதீர சமர விக்கிரம 54 ஓட்டங்களை பெற்றுக் கொடுத்தார். (4)


## வீட்டுக்கிருத்திய அழைப்பு



கடந்த 04.08.2023 வெள்ளிக்கிழமை அன்று இறைவனடி சேர்ந்த எமது குடும்பத் தலைவர்

அமரர் கதிரவேலுப்பிள்ளை சிவபாலசுந்தரம்

அவர்களின் வீட்டுக்கிருத்தியக் கிரியைகள் 03.09.2023 ஞாயிற்றுக்கிழமை பகல் 11.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறும். அத்தருணம் தாங்களும் தங்கள் குடும்பத்தினரும் வருகைதந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசனத்திலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

வடசேரி விநாயகர்
ஆலய முன்வீதி,
பெரியவிளான்.

இங்ஙனம்
குடும்பத்தினர்

(C-7180)


# இருபது-20 கிரிக்கெட்
# இங்கிலாந்து, ஆஸி. வெற்றி

இங்கிலாந்து- நியூசிலாந்து அணிகளுக்கு இடையிலான முதல் இருபது-20 கிரிக்கெட் போட்டி கடந்த 30 ஆம் திகதி நடைபெற்றது. இதில் முதலில் பட்டிங் செய்த நியூசிலாந்து நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவரில் 9 விக்கெட் இழப்பிற்கு 139 ரன்கள் சேர்த்தது. அந்த அணியின்கிளென் பிலிப்ஸ் அதிகபட்சமாக 41 ரன்கள் சேர்த்தார்.

இங்கிலாந்து அணி சார்பில் பிரைடன் கார்ஸ், லூக் வுட் ஆகியோர் தலா 3 விக்கெட் வீழ்த்தினர். பின்னர் 140 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய இங்கிலாந்து 14 ஓவரில் 3 விக்கெட்டுகளை மட்டுமே இழந்து இலக்கை எட்டி 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது.

தாவித் மலான் 54 ரன்களும் ஹாரி ப்ரூக் 43 ரன்களும் விளாசினர். அதே போல், தென்னாபிரிக்கா-அவுஸ்திரேலியா அணிகளுக்கு இடையில் முதல் இருபது-20 போட்டி நடைபெற்றது.

முதலில் பட்டிங் செய்த அவுஸ்திரேலியா 20 ஓவரில் 6 விக்கெட் இழப்பிற்கு 226 ரன்கள் குவித்தது. மிட்செல் மார்ஷ் அதிகபட்சமாக 49 பந்தில் 92 ரன்கள் எடுத்து ஆட்டமிழக்காமல் இருந்தார்.

டிம் டேவிட் 28 பந்தில் 64 ரன்கள் சேர்த்தார். பின்னர் 227 ரன்கள் அடித்தால் வெற்றி என்ற இலக்குடன் களம் இறங்கிய தென்னாபிரிக்கா 15.3 ஓவர்கள் மட்டுமே தாக்குப்பிடித்து 115 ரன்னில் சுருண்டது. இதனால் அவுஸ்திரேலியா 111 ரன் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. தென்னாபிரிக்கா அணியில் ரீசா ஹென்ரிக்ஸ் அதிகபட்சமாக 56 ரன்கள் சேர்த்தார். அவுஸ்திரேலியா அணி சார்பில் தன்வீர் சங்கா 4 விக்கெட்டும், மார்கஸ் ஸ்டாய்னிஸ் 3 விக்கெட்டும் வீழ்த்தினர். (4)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 5 இலட்சம் பயனாளிகளுக்கான அஸ்வெசும கொடுப்பனவு நாளை மறுதினம்

(கொழும்பு)

மேலும் 5 இலட்சம் பயனாளிகளுக்கான அஸ்வெசும கொடுப்பனவு நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் வழங்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

தற்போது 8 இலட்சம் பயனாளிகளுக்கான அஸ்வெசும முதற்கட்ட கொடுப்பனவுகளை வழங்கும் நடவடிக்கை ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

அஸ்வெசும திட்டம் தொடர்பில் கிடைக்கப்பெற்றுள்ள ஆட்சேபனைகள் மற்றும் மேன்முறையீடுகளை பரிசீலிக்கும் நடவடிக்கையும் தற்போது ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக நலன்புரி நன்மைகள் சபை தெரிவித்துள்ளது.

இதனிடையே, அஸ்வெசும திட்டத்திற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள மேலும் சில பயனாளர்களுக்கான கொடுப்பனவுகளை வழங்குவதற்கான நிதி வங்கிகளுக்கு விடுவிக்கப்படும் என நலன்புரி நன்மைகள் சபை மேலும் தெரிவித்துள்ளது. ( நி-5)




## வருவான் வடிவேலன்

சரவணப் பொய்கையில் உதித்தவனே
கார்த்திகைப் பெண்களிடம் வளர்ந்தவனே
ஔவைக்கு சுட்டபழம் கொடுத்தவனே
ஆண்டியாக மலையில் நிற்பவனே
இன மத பேதமின்றி இடர்களைத் தீர்ப்பவனே
குறத்தி மகளை மணந்தவனே
சூரர்களை அழித்திட்ட வேலவனே
தந்தைக்கு உபதேசம் செய்தவனே
முத்தமிழின் முருகனே இன்று
நல்லை நகர் வீதியிலே
வேலோடு மயில் மீது வருகின்றானே.

க.செல்வமலர்,
இடைக்காடு.

# போலி முத்திரைகளை பயன்படுத்தினால் விற்பனை ரத்து செய்யப்படும்

## மதுவரித்திணைக்களம் எச்சரிக்கை

(கொழும்பு)

மதுபான போத்தல்களில் போலி முத்திரைகளை பயன்படுத்தி விற்பனைசெய்யப்பட்ட குற்றம் நிரூபிக்கப்பட்டால் அந்த நிறுவனத்தின் உரிமம் உடனடியாக இரத்துச் செய்யப்படும் என மதுவரித்திணைக்களம் தெரிவித்துள்ளது.

குறித்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி தமக்கு பணிப் புரை விடுத்துள்ளதாக மதுவரித்திணைக்களம் குறிப்பிட்டுள்ளது.

இவ்வாறான சம்பவங்கள் நாட்டில் தொடர்ந்தும் பதிவாகி வருவதாக அந்ததிணைக்களம் குறிப்பிடப்பட்டுள்ளது.

அத்துடன், போதைப் பொருள் சோதனையில் ஈடுபட்ட மதுவரித்திணைக்களத்தின் அதிகாரிகள் இருவர் மீது மாலபே பகுதியில் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது.

அவர்களில் காயமடைந்த ஒருவர் களுத்துறை போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருவதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர். சம்பவம் தொடர்பில் மத்துகம பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (நி-5)

# பேருந்து கட்டணமும் அதிரடியாக அதிகரிப்பு

(கொழும்பு)

இன்று சனிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் பேருந்துக் கட்டணம் 4% அதிகரிக்கப்படும் என பேருந்து சங்கங்கள் அறிவித்துள்ளன.

நேற்று வெள்ளிக்கிழமை முதல் அமுலுக்கு வரும் வகையில் ஒரு லீற்றர் டீசலின் விலை 35 ரூபாவாக அதிகரிக்கப்பட்டது.

ஆண்டுதோறும் ஜூலை மாதம் பேருந்து கட்டண திருத்தம் மேற்கொள்ளப்படுகின்றது. இருப்பினும் இந்த ஆண்டு எந்த மாற்றமும் செய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-5)

# facebook. (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2903

### மீனா



மனைவி: என்னங்க... ரசத்துல புளியை கரைச்சி ஊத்த மறந்துட்டேன். நீங்க ஒன்னும் சொல்லாம சாப்பிடுறீங்க..
கணவன்: நீ ரசம் வைக்க போறேன்னு சொன்னப்பவே.. என் வயித்துல புளியை கரைச்ச மாதிரித்தான் இருந்தது.

### வசந்த்

வாழ்க்கையில சந்தோஷம் மட்டும் short Film மாதிரி டக்குன்னு முடிஞ்சிருது...




கருமம் இந்த பிரச்சினை மட்டும் English படம் மாதிரி 7வது, 8வதுன்னு part part டா வந்துக்கிட்டே இருக்கு...


### ஜெனார்த்தனன்




### கண்ணன்

மனைவி (கோபத்துடன்): நீங்க ஏன் என் பிறந்தநாளை ஞாபகம் வச்சிக்கல?
கணவன்: எப்படி ஞாபகம் வச்சிருக்கிறது... உனக்கு வயது கூடுன மாதிரியே இல்லை எப்பவும் பார்க்க இளமையாகவே இருக்க...
மனைவி (வெட்கத்துடன் சிரித்துக் கொண்டே): போங்க... நீங்க எப்பவுமே இப்படித்தான்..
கணவன்: (மைன்ட் வாய்ஸ் ல)...
தப்பிச்சேண்டா சேகரு...

### கல்யாணி




எத்தன வருசமா இங்க வந்து பணம் எடுத்துருக்கேன்... ஒரு தடவையாவது ஒரு ஐந்நூறுவா நோட்ட எக்ஸ்ட்ராவா எண்ணி குடுக்குதா பாரு... கல்நெஞ்சக்கார ஏடிஎம்

### ரவி

மனைவியின் வீக் பாயின்ட் என்னன்னு கண்டுபிடிச்சிட்டா அவங்களை நம்ம கன்ட்ரோலுக்கு கொண்டு வந்துடலாம்!




ஆனா பிரச்சினை என்னன்னா, நாம கண்டுபிடிக்கிறதுக்கு முன்னாடி, அவங்க நம்மளோட நூறு வீக் பாயிண்ட்டை கண்டுபிடிச்சிடுவாங்க...

ங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள்.
அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## யாழ். மத்திய பேருந்து நிலையத்தில் 24 மணி நேரமும் சேவை

(யாழ்ப்பாணம்)

வடபகுதியின் போக்கு வரத்து மையமாகவும் நாளாந்தம் பல ஆயிரக்கணக்கான பொதுமக்கள் தமது போக்குவரத்து தேவைக்கான மையமாகவும் பயன்படுத்தி வரும் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் 24 மணி நேர சேவையை வழங்கவுள்ளதாக இலங்கை போக்குவரத்து சபையின் வடபிராந்திய பிராந்தியத்தின் செயலாற்று முகாமையாளர் லம்பேட்ட தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் கூறுகையில்,

கடந்த யாழ்.மாவட்ட ஒருங்கிணைப்பு குழு கூட்டத்தில் கடற்றொழில் அமைச்சரும் யாழ்ப்பாணம் மற்றும் கிளிநொச்சி மாவட்டங்களின் ஒருங்கிணைப்பு குழுவின் தலைவருமான டக்ளஸ் தேவானந்தாவிடம் 24 மணிநேர சேவையை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகளைமேற்கொண்டு தருமாறு கோரிக்கை முன்வைக்கப்பட்டது.

அதற்கு அமைவாக அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா துறைசார் தரப்பினரது கவனத்திற்கு இவ்விடயத்தை கொண்டு சென்றதன் அடிப்படையில் குறித்த நடவடிக்கை தற்போது மேற்கொள்ளப்பட்டுள்ளதாகவும் இதனடிப்படையில் பயணிகள் போக்குவரத்து சேவையில் யாழ்ப்பாணம் மத்திய பேருந்து நிலையம் புதிய மைல்கல்லில் அடியெடுத்து வைத்துள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார். (4-6-33)

## இந்திய மீனவர்களின் அத்துமீறல்; யாழ். மீனவர்கள் போராட்டம்



(யாழ்ப்பாணம்)

**இந்திய மீனவர்களின் அத்துமீறல்களுக்கு எதிர்ப்பு தெரிவித்து நேற்று யாழ்ப்பாண மாவட்ட செயலகத்திற்கு முன்பாக மாபெரும் கவனயீர்ப்பு போராட்டம் ஒன்று முன்னெடுக்கப்பட்டது.**

யாழ்ப்பாண மாவட்ட கடற்றொழிலாளர் சங்கங்கள், சமாசங்கள், சம்மேளனத்தினர் மற்றும் மீனவ சமூகங்களினால் இந்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது போராட்டக்காரர்கள் "அழிக்காதே அழிக்காதே எமது வளங்களை அழிக்காதே, கடற்றொழில் அமைச்சரே இந்திய இழுவை படகுகளின் வருகையை நிறுத்துங்கள், கைது செய் கைதுசெய் இந்திய இழுவைப் படகுகளை கைது செய்" என கோஷமிட்டு, பாதாகைகளை ஏந்தியவாறு போராட்டத்தில் ஈடுபட்டனர். போராட்டத்தின் முடிவில் யாழ்ப்பாண மாவட்ட அரசாங்க அதிபரிடம் மகஜர் ஒன்றும் கையளிக்கப்பட்டது. (4-6-33-104)

## வடமராட்சி பகுதியில் திருட்டுக்கள் அதிகரிப்பு

(கரணவாய்)

வடமராட்சி கரணவாய் மத்தி பகுதியில் உள்ள வீடு ஒன்றில் கடந்த 28 ஆம் திகதி மூன்றரைப் பவுண் நகை களவு போயுள்ளது.

வீட்டில் ஆட்கள் யாரும் இல்லாத சமயம் இத் திருட்டுச்சம்வம் இடம்பெற்றுள்ளது.

இதேவேளை அப்பகுதியில் உள்ள ஆலயம் ஒன்றின் உண்டியலும் திருடப்பட்டுள்ளது.

குறித்த இரு சம்பவம் தொடர்பிலும் நெல்லியடி பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

மேலும் வடமராட்சி பகுதியில் தற்போது திருட்டுச்சம்பவம் அதிகரித்து வருவதாக பொதுமக்கள் குற்றஞ் சாட்டியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (4-6-60)

## தெய்வீக சுக அனுபவம்

(யாழ்ப்பாணம்)

வடமாகாண கல்வி, பண்பாட்டலுவல்கள், விளையாட்டுத்துறை மற்றும் இளைஞர் விவகார அமைச்சின் பண்பாட்டலுவல்கள் அலகும் யாழ் இந்திய துணைத் தூதரகமும் இணைந்து வருடாந்தம் ஏற்பாடு செய்து வரும் ஒன்பதாவது தெய்வீக சுகானுபவம் நிகழ்வில் இந்தியாவின் புல்லாங்குழல் வாத்திய விற்பன்னர் ஜே.ஏ.ஜெயந்த் மற்றும் வயலின் வாத்திய விற்பன்னர் B.அனந்தகிருஷ்ணன் ஆகியோரின் இசை நிகழ்வு மற்றும் பயிற்சிப்பட்டறை ஆகியன நடைபெறவுள்ளன.

அந்த வகையில் எதிர்வரும் 4 ஆம் திகதி காலை 9 மணிக்கு யாழ்.இந்துக்கல்லூரி சபாலிங்கம் அரங்கில் பயிற்சிப்பட்டறையும் தொடர்ந்து மாலை 6.30 மணிக்கு நல்லூர் சங்கிலியன் தோப்பில் இசை நிகழ்வும் இடம்பெறவுள்ளன.

இப்பயிற்சிப் பட்டறை மற்றும் இசைநிகழ்வு என்பவற்றில் கலைஞர்கள், இசை ஆசிரியர்கள், பல்கலைக்கழக நுண்கலைப்பீட மாணவர்கள் மற்றும் கலை ஆர்வலர்கள் கலந்து கொண்டு சிறப்பிக்குமாறு ஏற்பாட்டு குழுவினர் அறிவித்துள்ளனர். (4-6)

## கைத்தொழில் கண்காட்சி 2023 யாழில் நேற்று ஆரம்பமாகியது



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கைத்தொழில் கண்காட்சி நேற்று வெள்ளிக்கிழமை ஆரம்பமாகியுள்ளது.

கைத்தொழில் அமைச்சு மற்றும் கைத்தொழில் அபிவிருத்தி சபை என்பன இணைந்து ஏற்பாடு செய்துள்ள இந்த கண்காட்சி யாழ்ப்பாண கலாசார மண்டபத்தில் நாளை ஞாயிற்றுக்கிழமை வரை தொடர்ந்து மூன்று நாட்களுக்கு நடைபெறவுள்ளது.

கைத்தொழில் மற்றும் பெருந்தோட்ட அமைச்சர் கலாநிதி ரமேஷ் பத்திரன தலைமையில், கடற்றொழில் அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சிறு மற்றும் நடுத்தர தொழில் முயற்சிகள் அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் பிரசன்ன ரணவீர மற்றும் இந்திய உயர்ஸ்தானிகராலய தூதுவர், அதிகாரிகள் உள்ளிட்ட முக்கியஸ்தர்கள் கலந்து கொண்டனர்.

இலங்கையில் உள்ள 20 தொழிற்சாலைகளில் 300 இற்கும் மேற்பட்ட அரங்குகளில், புத்தாக்கங்கள், புதிய தொழில் நுட்பங்கள் மற்றும் வடமாகாணத்திற்கே உரித்தான பல கைத்தொழில்களை குறித்த கண்காட்சியில் காட்சிப்படுத்தப்பட்டன. (4-6-33)

## இரத்ததான முகாம்

(சாவகச்சேரி)

சுயாதீன ஊடகவியலாளர் ஞானப்பிரகாசம் பிரகாஷின் இரண்டாவது ஆண்டு நினைவு தினத்தை முன்னிட்டு இன்று சனிக்கிழமை சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரத்ததான முகாம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

உதிரம் கொடுத்து உயிர் காப்போம் எனும் தொனிப்பொருளில் அமரர் பிரகாஷின் நண்பர்களின் ஏற்பாட்டில் குறித்த இரத்ததான முகாம் இடம்பெறவுள்ளது.

காலை 8.30 தொடக்கம் மாலை 3.30மணிவரை இடம்பெறவுள்ள இரத்ததான முகாமில் கலந்து கொண்டு உதிரம் கொடுத்து உதவுமாறு விழா ஏற்பாட்டுக் குழுவினர் கேட்டுக்கொண்டுள்ளனர். (4-6-30)

## ஈழத்து திரைப்படமான 'புஷ்பக 27' திரையிடல்

(யாழ்ப்பாணம்)

ஈழத்திலிருந்து, தயாரிக்கப்பட்ட தமிழரின் தொன்மையை தேடி செல்லும் முதல் விண்வெளித்திரைப்படமான "புஷ்பக 27" யாழ்ப்பாணத்தில் திரையிடப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் ராஜா திரையரங்கில், இன்று 2ஆம் மற்றும் நாளை 3ஆம் திகதிகளில் மாலை 4.30 மணியளவில் சிறப்பு காட்சியாக இத்திரைப்படம் திரையிடப்பட்டவுள்ளதாகவும் எதிர்வரும் காலங்களில் இலங்கையின் ஏனைய இடங்களில் உள்ள திரையரங்குகளிலும் வெளிநாடுகளிலும் திரையிட நடவடிக்கை எடுத்துள்ளதாக படக்குழுவினர் அறிவித்துள்ளனர்.

சத்தியா மெண்டிஸின் திரைக்கதையில், காரை சிவநேசனின் இயக்கத்தில் இத்திரைப்படம் உருவாகியுள்ளது. (4-6-33)

## நல்லூர் உற்சவ கால தெய்வீக இசை அரங்கு

(யாழ்ப்பாணம்)

யாழ்.இளங்கலைஞர் மன்றத்தினரால் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தப்படும் தெய்வீக இசையரங்கு நிகழ்வில் நாளை 3 ஆம் திகதி மாலை 6.45 மணிக்கு நல்லூர் சாரங்கம் இசை மன்றத்தினரால் குழு இசை நடத்தப்படவுள்ளது.

இதன்போது வயலின் - கே.வேலதீபன், மிருதங்கம்- ஞா.வசந், நெறியாள் கை- பாசஸ்வதி ரஜீந்திரன் ஆகியோர் நிகழ்த்தவுள்ளனர்.

அதனைத் தொடர்ந்து 7.15 மணிக்கு சென்னை உதயாலயா அக்கடமி அக்கடமியினரால் நடன அரங்கு நடத்தப்படவுள்ளது.

இதன்போது நாட்டிய குருவாக உதய ஷிம்னா செயற்படவுள்ளார். அத்துடன் பாட்டு- சு.சந்திரிக்கா, மிருதங்கம்- சி.துரைராசா, வயலின்- இ.நிரோஜன், கீபோட்- ந.செல்வச்சந்திரன் ஆகியோர் இசைக்கவுள்ளனர். (4)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அரசாங்க உத்தியோகத்தர்களின் வீடுகளை குறிவைக்கும் திருடர்கள்

## சாவகச்சேரி பொலிஸ் பொறுப்பதிகாரி தெரிவிப்பு

(சாவகச்சேரி)

அரச உத்தியோகத்தர்களின் பெறுமதியான உடைமைகளைப் பாதுகாப்பது தொடர்பான அறிவித்தல் ஒன்றினை சாவகச்சேரி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி பாலித செனவிரட்ன சாவகச்சேரியில் உள்ள அரச திணைக்கள தலைவர்களுக்கு நேற்று வெள்ளிக்கிழமை அனுப்பி வைத்துள்ளார்.

இது தொடர்பாக திணைக்கள தலைவர்களுக்கு அவர் அனுப்பி வைத்துள்ள கடிதத்தில்,

தற்போது சாவகச்சேரி பொலிஸ் பிரிவிற்குள் திருடர்களின் நடமாட்டம் அதிகமாகி மக்களின் வீடுகளில் புகுந்து பெறுமதியான பொருட்கள் மற்றும் நகைகள் களவாடப்படும் சந்தர்ப்பங்கள் அதிகரித்துக் காணப்படுகின்றன.

குறிப்பாக கணவன்-மனைவி அரசாங்க உத்தியோகத்தர்களாக இருக்கின்ற வீடுகளில் திருடர்கள் பகல் வேளைகளில் தமது கைவரிசையைக் காட்டுகின்றனர். எனவே உங்கள் திணைக்களங்களில் பணி புரியும் உத்தியோகத்தர்கள், கடமைக்குச் செல்லும் போது தமது பெறுமதியான பொருட்கள் மற்றும் தங்க ஆபரணங்களை அலுமாரிகளில் வைக்காது மிகவும் பாதுகாப்பாக வைத்து விட்டு பணிக்கு செல்ல வேண்டும்.

கடமைக்குச் செல்லும் போது வீட்டில் யாராவது ஒருவரை நிறுத்தி விட்டு செல்ல வேண்டும் அல்லது வீடு தொடர்பான பாதுகாப்பான ஏற்பாடுகளை செய்து விட்டுச் செல்ல வேண்டும்.

சந்தேகத்திற்கு இடமான முறையில் நடமாடுபவர்கள் தொடர்பாக உடனடியாக பொலிஸாருக்கு அல்லது கிராம அலுவலருக்கு அறிவிக்க வேண்டும்.

வீடுகளில் பாதுகாப்பு கண்காணிப்பு கமரா பூட்டப்பட்டிருப்பின் அதன் நேரடி வீடியோவை தங்களது கையடக்கத் தொலைபேசியில் பதிவு செய்து அடிக்கடி கண்காணிக்க வேண்டும்.

தங்க நகைகளை அணிந்து செல்லும் போது பாதுகாப்பை அறிந்து செல்ல வேண்டும்.

இவ்வாறான நடைமுறைகளை பின்பற்றும் போது பொது மக்கள் மற்றும் உத்தியோகத்தர்கள் தமது பெறுமதியான உடைமைகளை பாதுகாத்துக் கொள்ள முடியும் என மேலும் அவர் தனது கடிதத்தில் தெரியப்படுத்தியுள்ளார். (4-6-30)

# கியூ.ஆர் முறை நீக்கம்

(கொழும்பு)

எரிபொருளை பெற்றுக் கொள்வதற்காக இதுவரை நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த கி.யூ.ஆர் நடைமுறை நீக்கப்பட்டுள்ளதாக எரிசக்தி அமைச்சு அறிவித்துள்ளது.

அதன்படி நேற்று வெள்ளிக்கிழமை முதல் இந்த முறைமை இரத்து செய்யப்படுவதாக மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜேசேகர தெரிவித்துள்ளார்.

ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்துள்ளார். (நி-5)

# தெய்வீகத் திருக்கூட்டம்

(யாழ்ப்பாணம்)

இந்து சமய கலாசார அலுவல்கள் திணைக்களம் நல்லூர் உற்சவ காலத்தை முன்னிட்டு நடத்தும் தெய்வீகத் திருக்கூட்டம் இன்று சனிக்கிழமை மாலை 4.15 மணிக்கு நல்லை திருஞான சம்பந்தர் ஆதீனக் கலா மண்டபத்தில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாச்சார்ய சுவாமிகள் மற்றும் ஆன்மிகச் சுடர் ரிஷி தொண்டு நாதன் சுவாமிகள் திருமுன்னிலையில் யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட சைவசித்தாந்த துறை சிரேஷ்ட விரிவுரையாளர் தி.செல்வமனோகரன் தலைமையில் இடம்பெறவுள்ளது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக யாழ்.பல்கலைக்கழக இந்து கற்கைகள் பீட முன்னாள் பீடாதிபதி திருமதி. சுகந்தினி ஸ்ரீமுரளிதரன் மற்றும் சிறப்பு அதிதியாக கோப்பாய் ஓய்வு பெற்ற கோட்டக்கல்விப் பணிப்பாளர் கே.வி குணசேகரம் ஆகியோர் கலந்து கொள்ளவுள்ளனர். (4-6)



தமிழ் தூது தனிநாயகம் அடிகளாரின் 43 ஆவது நினைவுதினம் நேற்று வெள்ளிக்கிழமை நடைபெற்றது. மன்னார் பஜார் பகுதியில் உள்ள அவரது சிலைக்கு மாலை அணிவித்து மலர் தூவி அஞ்சலி செலுத்தப்பட்டது. (படம்:-ஜோசப்நயன்)

# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார்மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 180 | 200 | 180 | 200 |
| உருளைக்கிழங்கு | 200 | 200 | 190 | 200 |
| பச்சைமிளகாய் | 500 | 400 | 550 | 600 |
| தக்காளி | 200 | 150 | 140 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 200 | 200 | 200 |
| கோவா | 250 | 200 | 200 | 250 |
| கரட் | 350 | 340 | 400 | 400 |
| பூசணி | 80 | 100 | 100 | 100 |
| புடோல் | 80 | 80 | 100 | 150 |
| வாழைக்காய் | 200 | 200 | 200 | 200 |
| சின்ன வெங்காயம் | 250 | 240 | 300 | 300 |
| பெரிய வெங்காயம் | 220 | 220 | 200 | 240 |
| பாகற்காய் | 400 | 400 | 400 | 400 |
| வெண்டக்காய் | 80 | 120 | 80 | 200 |
| கருணைக் கிழங்கு | 150 | 170 | 180 | 200 |
| பயற்றங்காய் | 200 | 150 | 140 | 200 |
| லீக்ஸ் | 200 | 250 | 200 | 200 |
| பீற்றூட் | 120 | 120 | 120 | 150 |
| கறிமிளகாய் | 300 | 250 | 250 | 300 |
| முருங்கைக்காய் | 200 | 250 | 280 | 200 |
| போஞ்சி | 400 | 450 | 500 | 600 |
| கத்தரிதம்புள்ள | 150 | 150 | 180 | 160 |
| கீரை - 1 பிடி | 80 | 80 | 60 | 100 |
| தேசிக்காய் | 700 | 600 | 800 | 1400 |
| தேங்காய் (ஒன்று) | 80 | 80 | 80 | 60-80 |
| இராசவள்ளி | 350 | 400 | 380 | 350 |
| வெங்காயப்பூ | 200 | 250 | 200 | 400 |
| முள்ளங்கி | 80 | 80 | 100 | 200 |
| பொன்னாங்காணி | 80 | 70 | 80 | 50 |
| வல்லாரை | 40 | 30 | 40 | 60 |
| ஈரப்பலா | 80 | 80 | 60 | 120 |


# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் வாடகைக்கு வீடு/கட்டடம் தேவை

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் பின்வரும் துறைகளின் பயன்பாட்டிற்காக சகல வசதிகளுடனும் கூடிய வீடு/ கட்டடம் வாடகைக்குத் தேவை.

1. மருதனார்மடத்தில் அமைந்துள்ள சேர் பொன்னம்பலம் இராமநாதன் அரங்காற்று மற்றும் கட்புலக் கலைகள் பீடத்தின் நாடகமும் அரங்கியலும் துறையின் பயன்பாட்டிற்கானது. (மருதனார்மடத்திலிருந்து 02 கிலோமீற்றருக்குள் தேவை)

| இல. | விபரம் | வேண்டப்படும் தகைமைகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அறைகள் | எல்லா அறைகளும் குறைந்தது (10' x 12') சதுர அடியுடன் குளிரூட்டப்பட்டதாக இருத்தல் விரும்பத்தக்கது | குறைந்தது 10 |
| 02 | ஹோல் (Hall) | குறைந்தது 1500 சதுர அடிகள் | குறைந்தது 03 |
| 03 | வீடு/கட்டடத்தின் பரப்பளவு | குறைந்தது 5000 சதுர அடிகள் | - |
| 04 | தள அமைப்பு | முழுமையாக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் (மாபிள்/ தராசோ விரும்பத்தக்கது ) | - |
| 05 | வாகன தரிப்பிட வசதி | குறைந்தது 20 மோட்டார் சைக்கிள்கள், 02 கார்கள் விடக்கூடியதாக இருத்தல் வேண்டும் | - |
| 06 | குளியல் அறைகள்/ மலசலகூடங்கள் | பொதுவான குளியல் அறைகள் / மலசலகூடங்கள் | குறைந்தது 10 |

2. திருநெல்வேலியில் அமைந்துள்ள யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மீன்பிடியியல் துறையின் பயன்பாட்டிற்கானது (திருநெல்வேலியிலிருந்து 500 மீற்றருக்குள் தேவை)

| இல. | விபரம் | வேண்டப்படும் தகைமைகள் | எண்ணிக்கை |
|---|---|---|---|
| 01 | அறைகள் | எல்லா அறைகளும் குறைந்தது (10' x 12') சதுர அடியுடன் குளிரூட்டப்பட்டதாக இருத்தல் விரும்பத்தக்கது | குறைந்தது 06 |
| 02 | ஹோல் (Hall) | குறைந்தது 400 சதுர அடிகள் | 01 |
| 03 | வீடு/கட்டடத்தின் பரப்பளவு | குறைந்தது 2250 சதுர அடிகள் | - |
| 04 | தள அமைப்பு | முழுமையாக நல்ல முறையில் பராமரிக்கப்பட்டிருத்தல் வேண்டும் (மாபிள்/ தராசோ விரும்பத்தக்கது ) | - |
| 05 | வாகன தரிப்பிட வசதி | குறைந்தது 10 மோட்டார் சைக்கிள்கள், 02 கார்கள் விடக்கூடியதாக இருத்தல் வேண்டும் | - |
| 06 | குளியல் அறைகள்/ மலசலகூடங்கள் | பொதுவான குளியல் அறைகள் / மலசலகூடங்கள் | குறைந்தது 03 |

வீட்டை/ கட்டடத்தை வாடகைக்குத் தர விரும்புவோர் மீளளிக்கப்படாத கட்டணமாக ரூபா 1000 இனை பல்கலைக்கழக காசாளர் கருமபீடத்தில் அல்லது நிதியாளர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் பெயரில் யாழ்.பல்கலைக்கழக மக்கள் வங்கியின் கணக்கிலக்கம் **970000060000276** இற்கு எந்தவொரு மக்கள் வங்கிக் கிளையிலும் செலுத்தி பெற்ற பற்றுச்சீட்டை 13.09.2023 மதியம் 12.00 மணிக்கு முன்னர் உதவிப்பதிவாளர், நிர்வாகம் அவர்களிடம் சமர்ப்பித்து விண்ணப்பப்படிவங்களைப் பெற்று 18.09.2023 ஆம் திகதி பி.ப 2.30 மணிக்கு முன்னர் உதவிப் பதிவாளர்/ பொது நிர்வாகம், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் எனும் முகவரிக்கு கிடைக்கக் கூடியவாறு பதிவுத் தபாலில் அனுப்பவும். கடித உறையின் இடது மேல் மூலையில் **"யாழ்ப்பாணப் பல்கலைக்கழக பயன்பாட்டிற்கான வீடு/ கட்டடம்"** எனக் குறிப்பிட்டு அனுப்ப வேண்டும். பல்கலைக்கழக கேள்விச் சபையின் முடிவே இறுதியானது.

**தொடர்புகளுக்கான தொலைபேசி இல: 021 222 6517**

**பதிவாளர்.**


(நி-7175)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பாரதம்

## முகநூல் தரிசனம் 192

## பணத்திற்குப் பதிலாக சிற்பிகளைக் கொடுத்த சிறுவன்



ஆறு வயது சிறுவன் ஒருவன் தன் நான்கு வயது தங்கையை அழைத்து கொண்டு கடைத் தெருவின் வழியே சென்று கொண்டு இருந்தான்.

ஒரு கடையின் வாசலில் இருந்த பொம்மைகளை பார்த்து தயங்கி நின்ற தங்கையை பார்த்து, "எந்த பொம்மை வேண்டும்?" என்றான்.

அவள் கூறிய பொம்மையை எடுத்து அவள் கையில் கொடுத்து விட்டு ஒரு பெரிய மனிதனின் தோரணையுடன் கடையின் முதலாளியை பார்த்து... "அந்த பொம்மை என்ன விலை?" என்று கேட்டான்.

அதற்கு சிரித்துக்கொண்டே அந்த முதலாளி,

"உன்னிடம் எவ்வளவு உள்ளது?" என்று கேட்டார்.

அதற்கு அந்த சிறுவன்.... தான் விளையாட, சேர்த்து வைத்து இருந்த கடல் சிப்பிகளை தன் பாக்கெட்டில் இருந்து எடுத்து கொடுத்தான்!

"இது போதுமா...?" என்று கவலையுடன் கேட்டான்.

அதற்கு அந்த கடைக்காரர் அவனின் கவலையான முகத்தை பார்த்து கொண்டே..... "எனக்கு நான்கு சிப்பிகள் போதும்!" என்று மீதியை கொடுத்தார்.

சிறுவன், மகிழ்ச்சியோடும் மீதி உள்ள சிப்பிகளோடும்.... தன் தங்கையோடு அந்த பொம்மையை எடுத்துக்கொண்டு சென்றான்.

இதை எல்லாம் கவனித்து கொண்டு இருந்த அந்த கடையின் வேலையாள்.... முதலாளியிடம்,

"அய்யா! ஒன்றுக்கும் உதவாத சிப்பிகளை வாங்கிக் கொண்டு விலை உயர்ந்த பொம்மையை கொடுத்து விட்டீர்களே...." என்றான்.

அதற்கு அந்த முதலாளி,

அந்த சிறுவனுக்கு, "பணம் கொடுத்தால்தான் பொம்மை கிடைக்கும்" என்று புரியாத வயது. அவனுக்கு அந்த சிப்பிகள்தான் உயர்ந்தவை.

நாம் பணம் கேட்டால் அவன் எண்ணத்தில் "பணம் தான் உயர்ந்தது" என்ற மாற்றம் வந்து விடும்... அதை தடுத்து விட்டேன்.


மேலும், "தன் தங்கை கேட்டவற்றை தன்னால் வாங்கித் தர முடியும்" என்ற தன்னம்பிக்கையை அவனுக்குள் விதைத்து விட்டேன்.

என்றோ ஒரு நாள்... அவன் பெரியவன் ஆகி இந்த சம்பவங்களை நினைத்து பார்க்கையில், "இந்த உலகம் நல்லவர்களால் ஆனது!" என்ற நல்ல எண்ணம் அவன் மனதில் தோன்றும்.

ஆகையால், அவன் எல்லோரிடமும் அன்பு காட்ட தொடங்குவான். உலகம் அன்பினால் கட்டமைக்கப்பட வேண்டும் என்றார்!

அன்பு வாசகர்களே!
முகநூலில் உங்கள் மனதைத் தொடும் பதிவுகளை வலம்புரியின் "முகநூல் தரிசனம்" பகுதிக்கு உங்கள் பெயரைக் குறிப்பிட்டு Valampurii Seithy எனும் வலம்புரி முகப் புத்தகத்திற்கு Share செய்யுங்கள் அல்லது 076 636 3378 எனும் viber இலக்கத்திற்கு அல்லது valampurii@yahoo.com எனும் E-Mail இற்கு அனுப்பி வையுங்கள்.

## சூரியனை ஆய்வு செய்ய புறப்படுகிறது ஆதித்யா



(டில்லி)

சூரியனை ஆய்வு செய்யும் ஆதித்யா - எல் 1 விண்கலத்தின் விண்கலம் இன்று ஏவப்படவுள்ளது.

கடந்த வாரம் சந்திரயான் - 3 திட்டம் வெற்றி அடைந்ததை அடுத்து உலகமே இந்தியாவை திரும்பிப் பார்த்துள்ளது.

ஏனென்றால் நிலவின் தென் துருவத்தை ஆய்வு செய்யும் முதல் நாடு என்ற பெருமையை இந்தியா பெற்றுள்ளது.

இந்நிலையில் அடுத்த சாதனை முயற்சியாக இஸ்ரோ சூரியனை ஆய்வு செய்ய உள்ளது. இதற்காக "ஆதித்யா- எல்1" என்ற விண்கலம் இன்று பகல் 11.50 மணிக்கு ஸ்ரீஹரிகோட்டாவில் உள்ள சதீஷ் தவான் விண்வெளி ஆய்வு மையத்தில் இருந்து ஏவப்படவுள்ளது. (நி-5)

## புற்றுநோ... கண்டுபிடி...

(லண்டன்)

உலகில் புற்றுநோ... இங்கிலாந்து தே... படைத்துள்ளது. ... நோயாளிகளுக்கு ... நிமிடங்களில் செ...

இந்த ஊசி மருந்தை உடலுக்குள் செலுத்திய 7 நிமிடத்தில் இந்த மருந்து வேலை செய்ய ஆரம்பித்துவிடும் என்றும் இது சிகிச்சைக்கான நேரத்தை முக்கால்வாசி வரை குறைக்கும் என இந்த மருந்தை கண்டுபிடித்த

இ... கே... ம... சி... வ... த...

## தென்னாபிரிக்கா குடியிருப்பில் தீ... 74 பேர் உயிரிழப்பு, 25 பேர் ப...

(பிரிட்டோரியா)

தென்னாபிரிக்காவில் குடியிருப்பில் ஏற்பட்ட தீ விபத்தில் 74 பேர் உயிரிழந்ததுடன் 25 இற்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர்.

ஜொகன்னஸ்பர்க் நகரின் மையப் பகுதியில் உள்ள அடுக்குமாடிக் குடியிருப்பில் நேற்று முன்தினம் காலை இத் தீ விபத்து ஏற்பட்டது.

தீ விபத்துக்கான காரணம் தெரியவில்லை என்றும், மீட்புப் பணிகளில் தீயணைப்புத் துறையினர் ஈடுபட்டுள்ளதாகவும் அவசரகாலப் பணிகள் அமைப்பின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

பாதிக்கப்பட்ட அடுக்குமாடிக் குடியிருப்புக்கு அருகில் அம்புலன்ஸ் வாகனங்களும் தீயணைப்பு வண்டிகளும் நிற்கும் காட்சிகளும் குடியிருப்பின் ஜன்னல்கள் வழியே நெருப்பு கொழுந்து விட்டு எரியும் காட்சிகளும் வெளியாகியுள்ளன. (நி-5)



## பனாமா கால்வாயில் கடும் வறட்சி உலகளாவிய விலை ஏற்றத்திற்கு வழிவகுப்பு

மழை நீரையே நம்பி இருக்கும் இந்தப் பனாமா கால்வாயில் முன்னெப்போதும் இல்லாத அளவிற்குக் கடும் வறட்சி ஏற்பட்டுள்ளது என்றும் மழையின் அளவு குறைந்துவிட்டதால் கால் வாயின் நீர்மட்டம் வெகுவாகக் குறைந்துள்ளது என்றும் போதுமான ஆழம் இல்லாததால் கப்பல்கள் கால்வாயைக் கடந்து செல்ல இயலவில்லை என்றும் தெரிய வந்துள்ளது. இதன் காரணமாக கப்பல்கள் எதிர்பார்த்த அளவுக்கு அதிக சரக்குகளை ஏற்றிச் செல்ல முடிய வில்லை.

இதற்கிடையில் பெரிய மற்றும் கனமான கப்பல்களுக்குக் கூடுதல் வரியைப் பனாமா கால்வாய் ஆணையம் விடுத்துள்ளதாகவும் இதனால் விநியோகத் தடையும் விலை ஏற்றமும் ஏற்படலாம் என்றும் கூறப்படுகிறது.

இந்தக் கால்வாயின் மிகப்பெரிய பயனாளியாக இருப்பது அமெரிக்காதான். கால்வாயின் போக்குவரத்தில் சுமார் 73 சதவீதத்தை அமெரிக்க ஏற்றுமதி-இறக்குமதிகள் ஆக்கிரமித் துள்ளன. ஆண்டொன்றுக்கு 270 பில்லியன் டொலர் மதிப்பிலான அமெரிக்கச் சரக்குகள் கால்வாயைக் கடக்கின்றன. அது உலகளாவிய விலையேற்றத்திற்கு வழிவகுக் கும்.

தற்போது இந்த கால்வாயில் ஏற்பட்டிருக்கும் வறட்சியால் கப்பல்கள் இதைக் கடப்பதற்கு சுமார் 21 நாட்கள் வரை காத்திருக்க வேண்டிய தாகக் கூறப்படுகிறது. கப்பல்கள் நீண்ட பாதைகளைத் தேர்ந்தெடுக்க வேண்டிய கட்டாயத்தில் இருப்பதால் எரிபொருள் செலவுகள் மற்றும் பசுமையில்லா வாயு வெளியேற்றம் ஆகிய இரண்டும் அதிகரித்த வண்ணம் இருக்கின்றன.

இதனால் பொருட்களின் விலை அதிகரித்து, உலகளாவிய வணிகங்கள் மற்றும் நுகர்வோர்கள் அதிக அளவில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வெளிநாடு

# நோய்க்கான ஊசி மருந்து

# பிடித்து சாதனை படைத்தது இங்கிலாந்து

)

**ற்றுநோய் சிகிச்சைக்கு அளிக்கும் ஒரு ஊசி மருந்தை து தேசிய சுகாதார அமைப்பு உருவாக்கி சாதனை ளது. அடிஸோலிசூமாப் எனப்படும் இந்த ஊசி மருந்து ளுக்கு நரம்பு வழியாக நேரடியாக செலுத்திய பின் 7 ல் செயற்படும் என தெரிவிக்கப்பட்டுள்ளது.**

இங்கிலாந்து தேசிய சுகாதார சேவை தெரிவித்துள்ளது.

இங்கிலாந்தில் நுரையீரல், மார்பகம், கல்லீரல் மற்றும் சிறுநீர்ப்பை உள்ளிட்ட பல்வேறு வகையான புற்றுநோயால் பாதித்தவர்களுக்கு இரத்தமாற்று சிகிச்சை மூலம் தற்போது சிகிச்சை அளிக்கப்பட்டு வருகிறது.

இந்த நிலையில், ஜெனென்டெக் ரோச் நிறுவனம் அடிஸோலிசூமாப் எனப்படும் முதல் ஊசி மருந்தை உருவாக்கி சாதனை படைத்துள்ளது.

இதுவொரு நோய் எதிர்ப்பு சிகிச்சை மருந்தாகும். இது நோயாளியின் உடலில் உள்ள புற்றுநோய் செல்களைத் தேடி அழிக்க உதவுகிறது.


மேலும், "தோலுக்கு கீழ்" செலுத்தக்கூடிய இந்த ஊசி மருந்தால் புற்றுநோய்க்கான சிகிச்சை காலம் மூன்றில் ஒரு பங்காகக் குறையும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இந்த ஊசி மருந்து மூலம் புற்றுநோயாளிகளுக்கு விரைவாக சிகிச்சை அளிக்க முடிவதுடன், நாள்தோறும் அதிகமான நோயாளிகளுக்கு சிகிச்சை அளிக்க முடியும் என தேசிய சுகாதார சேவை அமைப்பின் ஆலோசகர் மற்றும் புற்றுநோயியல் நிபுணர் மருத்துவர் அலைக்சாண்டர் மார்ட்டின் தெரிவித்துள்ளார்.

தற்போது இந்த ஊசி மருந்துக்கு அங்கீகாரம் கேட்டு மருந்துகள் மற்றும் சுகாதாரப் பொருட்கள் ஒழுங்குமுறை ஆணையத்துக்கு (எம்எச்ஆர்ஏ) விண்ணப்பிக்கப்பட்டுள்ளதாகவும் ஒப்புதல் கிடைத்தவுடன் புற்றுநோய் பாதித்தவர்களில் பெரும்பாலானவர்கள் உடனடியாக ஊசி மருந்து சிகிச்சைக்கு மாறுவார்கள் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

ஆனால் அடிஸோலிசூமாப் உடன் இணைந்து ஹீமோதெரபி எடுத்துக் கொள்ளும் நோயாளிகள் இரத்தமாற்று சிகிச்சை எடுத்துக் கொள்ள வேண்டியிருக்கும் என்று தெரிவித்துள்ளார். (நி-5)

## ல் தீ விபத்து
## ர் படுகாயம்



## ட்சி
## ப்பு

இதைக் நாட்கள் வண்டிய கப்பல்கள் த் தேர்ந் டாயத்தில் ள் செல மயில்லா ஆகிய த வண்

ட்களின் உலகளா மற்றும் அளவில்

பாதிக்கப்படுவார்கள் என்றும் கூறப் படுகிறது. இந்த வறட்சிக்கு எல்நினோ போன்ற காலநிலை நிகழ்வுகளே காரணங்களாகக் கூறப்படுகின்றன.

இருப்பினும் இத்தகைய சவால்களை எதிர்த்துப் பனாமா கால்வாய் ஆணையம் நீர்ப் பாதுகாப்பு நடவ டிக்கையைத் துவக்கியிருக்கிறது. கால்வாய்க்கு நீர்வரத்தை அதிகரிக்க புதிய நீர்த்தேக்கம் கட்டுவது போன்ற மாற்று வழிகளையும் ஆராய்ந்து வருகிறது.

பனாமா கால்வாய்க்கு இரு பக்கங்க ளிலும் 200இற்கும் மேற்பட்ட கப்பல்கள் முடங்கிக் கிடப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

# உக்ரைனுக்கு ஆயுதங்களை தொடர்ந்து வழங்க பிரித்தானியா அமேசான் நிறுவனம் அல்ல

## சர்ச்சைக்குள்ளான பேச்சால் இராஜினாமா செய்த பிரித்தானிய பாதுகாப்பு செயலர்



(லண்டன்)

பிரித்தானியாவின் பாதுகாப்புச் செயலாளர் பென் வாலேஸ் தனது பதவியை இராஜினாமா செய்துள்ளார்.

இந்நிலையில், தனது பதவி விலகல் கடிதத்தை பிரதமர் ரிஷி சுனக்குக்கு அனுப்பி வைத்துள்ளார் என தெரிவிக்கப்படுகின்றது. நேட்டோ உச்சி மாநாடு ஒன்றில், உக்ரைனுக்கு ஆயுதங்கள் வழங்கிக் கொண்டே இருக்க, பிரித்தானியா ஒன்றும் அமேசான் நிறுவனம் அல்ல என்று பென்வாலேஸ் கூறியதைத் தொடர்ந்து பெரும் சர்ச்சை கிளம்பியுள்ளது.

அத்துடன், அவரை நேட்டோவின் அடுத்த தலைவராக்க எடுக்கப்பட்ட பிரித்தானியாவின் முயற்சிகளும் தோல்வியில் முடிந்துள்ளன.

இந்த கோடையில் அமைச்சரவையில் இருந்து விலகுவதாக அறிவித்திருந்த பென் வாலேஸ், பிரதமர் ரிஷி சுனக்கிற்கு எழுதிய கடிதத்தில், 'நான் புறக்கணித்த வாழ்க்கையின் சில பகுதிகளில் முதலீடு செய்வதற்காகவும் புதிய வாய்ப்புகளை ஆராய்வதற்காகவும் பதவியிலிருந்து விலகுகிறேன்' என்று குறிப்பிட்டுள்ளார். (நி-5)

# அமெரிக்காவில் ஒக்டோபர் மாதம் இந்து பாரம்பரிய மாதமாக அறிவிப்பு

## இந்து மதத்திற்கு கிடைத்த கௌரவம்

(வோஷிங்டன்)

அமெரிக்காவில் ஒக்டோபர் மாதம் இந்து பாரம்பரிய மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

ஜோர்ஜியா மாகாணத்தில் இந்து அமெரிக்க சமூக மக்கள் அதிகளவில் வசித்து வருவதுடன் அவர்கள் மாகாண வளர்ச்சிக்கு பெரும் பங்காற்றிவருவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதனைக் கவனத்திற்கொண்டு, ஜோர்ஜியாவில் ஒக்டோபர் மாதம் இந்து பாரம்பரிய மாதமாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து ஜோர்ஜியா மாகாண ஆளுநர் பிரையன் கெம்ப் வெளியிட்ட அறிவிப்பில், இந்து பாரம்பரியம், கலாசாரம், மரபுகள் மற்றும் மதிப்புகள் ஆகியனவற்றை பின் பற்றுவோருக்கு, வாழ்வின் எண்ணற்ற பிரச்சினைகளுக்கு விலைமதிப் பற்ற தீர்வுகளை வழங்குவதாகவும் வழிகாட்டுதலுக்காக இந்து மத போதனைகளை தேடிப் பார்க்கும் கோடிக்கணக்கான தனி நபர்களுக்கு ஊக்கம், பிரதிபலிப்பு மற்றும் ஆழ்ந்த சிந்தனை ஆகிய வற்றிற்கான ஒரு வளமாகவும் அவை சேவையாற்றுகின்றன எனக் குறிப்பிட்டுள்ளார்.

உலகில் 100 கோடி பக்தர்களுடன் மற்றும் அமெரிக்காவில் தோராய அடிப்படையில் 30 இலட்சம் பேருடன் 3ஆவது மிகப்பெரிய மத மாக இந்துமதம் உள்ளதாக குறித்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ‘இராணுவ முகாமை அகற்ற வேண்டாம்’

## ஆனைவிழுந்தான் மக்கள் போராட்டம்

(தருமபுரம்)

கிளிநொச்சி நகர்ப்பகுதியில் உள்ள இராணுவ முகாமை அகற்ற வேண்டாம் எனக் கோரி ஆனைவிழுந்தான் மக்கள் நேற்றுப் போராட்டம் ஒன்றை முன்னெடுத்தனர்.

இதன்போது கருத்துத் தெரிவித்த மக்கள் தமது பகுதியில் அனைத்து விடயங்களிலும் இராணுவம் ஒத்தாசை புரிவதாகவும் தற்பொழுது ஏற்பட்டுள்ள வறட்சியான நிலைமையிலும் தங்களுக்கான குடிநீர் விநியோகத்தினை இராணுவத்தினரே மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர்.

தமது பகுதிகளில் நடைபெறும் எந்த ஒரு நிகழ்வாயினும் இராணுவத்தினரின் உதவியே முதல் கிடைக்கப் பெறுவதாகவும் தமது பகுதிகளில் நடைபெறும் மரண நிகழ்வுகளில் கூட இராணுவத்தின் பங்களிப்பு மிக அதிகமாக உள்ள தாகவும் தெரிவித்தனர்.

மேலும் தமது பகுதிகளில் சட்டவிரோத் செயற்பாடுகள் அதிகரித்து காணப்படுவதன் காரணமாக இதனை கட்டுப்படுத்துவதில் இராணுவத்தினரே முன்நிற்பதாகவும் எனவே இப்பகுதியில் உள்ள இராணுவ முகாமினை அகற்ற வேண்டாம் எனவும் வலியுறுத்தினர். (4-6-315-316)



# ஆதனப் பெயர்மாற்றம்

யாழ்.மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம் -09, கல்லூரி ஒழுங்கை, ஆதன இல 56 என்னும் வரிமதிப்பீட்டு இலக்கத்தைக் கொண்ட ஆதனம் முருகப்பர் சபாபதி என ஆதனப் பதிவேட்டில் பதியப்பட்டுள்ளது.

குறித்த ஆதனம் யாழ்ப்பாணம், வண்ணார்பண்ணை கிழக்கு, கல்லூரி ஒழுங்கை இலக்கம் 56 ஐ சேர்ந்த சுப்பையா முத்துலிங்கமும் பெண் அன்னலட்சுமியும் ஆகிய அவர்கள் 19.05.1980 ஆம் திகதியிட்டு பிரசித்த நொத்தாரிசு சி.இராசநாயகம் முகதாவில் 123 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதி மூலம் அனலைதீவு 7 ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த முருகப்பர் சபாபதிக்கு வழங்கியுள்ளனர்.

குறித்த ஆதனத்தை கனடா தேசத்திலிருந்து வந்து யாழ்ப்பாணம், வண்ணார் பண்ணை கிழக்கு, கல்லூரி ஒழுங்கை , இலக்கம் 56. எனும் முகவரியில் தங்கியிருந்த பவானந்தம் ஜெயமோகனும் பெண் சிவமணியும் அவர்கள் வெளிப்படுத்தி உறுதிப்படுத்தியதாவது,

இதன்கீழ் ஆதன அட்டவணையில் நன்கு விபரிக்கப்படும் ஆதனமானது 1989 ஆம் ஆண்டு கார்த்திகை மாதம் 22 ஆம் திகதி நொத்தாரிசு வை.ச.செந்தில்நாதன் முன்பாக 4575 ஆம் இலக்கத்தில் எங்களிடையே நிறைவேற்றியுள்ள திருமணம் காரணமாக எங்களில் 2 ஆம் பேரின் பெற்றோர் முருகப்பர் சபாபதியும் பெண் கனகம்மாவும் ஆகியவர்களால் சீதனமாக கையளிக்கப்பட்டதென்றும், எனினும் குறித்த 4875 ஆம் இலக்க சீதன உறுதியானது குறித்த நொத்தாரிசுவிடமிருந்து, அப்போதிருந்த நாட்டுச் சூழ்நிலை காரணமாக நாங்கள் பெற்றுக் கொள்ள முடியவில்லை என்றும், எனினும் தற்போது குறித்த நொத்தாரிசு காலமாகி விட்டதாலும் அதன் பிரதியை பெற யாழ்ப்பாணம் காணிப்பதிவகத்தில் தேடுதல் செய்ததன் விளைவாக குறித்த நொத்தாரிசு குறித்த 4875 ஆம் இலக்க சீதன உறுதியின் மூலப் பிரதியை பதிவுக்காக சமர்ப்பிக்கவில்லை என்பதை D472/131 பதிவு வாயிலாக அறிந்து கொண்டதாலும், மேலும் குறித்த நொத்தாரிசு குறித்த 4875 இன் இணைப்பிரதியையும் ஒப்படைக்கவில்லை என்பதையும் தேடுதல் வழியாக அறிந்து கொண்டதுடன், இதற்கு அத்தாட்சியாக 1989 ஆம் ஆண்டின் சீதன உறுதியானது நிறைவேற்றப்பட்டு முத்திரைக் கட்டணமும் செலுத்தப்பட்டதற்கான சான்று உள்ளதென்றும் உறுதிப்படுத்துவதுடன் குறித்த ஆதனம் யாழ்ப்பாண மாவட்டம் வண்ணார்பண்ணை வடகிழக்கு, இறையில் குளியாவளவு எனும் பெயரும் விஸ்தீரணம் நிலப்பரப்பு (1) ஒன்று கொண்டது என்றும் இதில் குறிப்பிடப்படும் ஆதனம் எவ்வித பாரம்பராதீனத்திற்கும் உட்பட்டிருக்கவில்லை என்றும் எங்களுக்கு குறித்த ஆதனத்தின் உரித்தை வெளிப்படுத்த எவ்வித சாதனமும் இல்லாததாலும், அவர்கள் இச்சாதன வழியாக வெளிப்படுத்தி உறுதிப்படுத்திக் கொள்கிறார்கள்.

### ஆதன அட்டவணை

வடமாகாணம், யாழ்ப்பாண வண்ணார்பண்ணை கோவிற்பற்று யாழ்ப்பாணம் மாநகரசபை. நல்லூர் பிரதேச செயலகம் கிராம அலுவலர் பிரிவு J/101 வண்ணார்பண்ணை வடகிழக்கு இறை "குளியாவளவு" விஸ்தீரணம் நிலப்பரப்பு 3 குளி 12 இதனை உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் C.இரத்தினசிங்கம் அவர்கள் 1979.11.02 ஆம் திகதியில் தயாரித்த 1066 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தின்படி விஸ்தீரணம் நிலப்பரப்பு 4. இதில் மேற்குப் பக்கமாக குறித்த 1066 ஆம் இலக்க அளவைப்படத்தில் துண்டு -1 எனக்காட்டப்பட்ட பாகம் விஸ்தீரணம் நிலப்பரப்பு (1) ஒன்றும், அதற்குள் அடங்கிய வீடும், கிணறும், வான்பயிர், செய்பயிர்களும் மற்றுமதற்குச் சேர்ந்தவைகளும். இது மீள உத்தரவு பெற்ற நிலஅளவையாளர் C.இரத்தினசிங்கம் அவர்கள் 1980.05.18 ஆம் திகதியில் தயாரித்த 1178 ஆம் இலக்க நிலஅளவைப்படத்தில் துண்டு -1 எனச் சுட்டப்பட்டுள்ளது. இதன் எல்லை.

கிழக்கு :- முத்துலிங்கம் மகள் ஜெகதீஸ்வரிக்குரிய ஆதனம்.
வடக்கு :- பிரத்தியேக ஒழுங்கை.
மேற்கு :- ஒழுங்கை.
தெற்கு :- தம்பு பெண் பூரணத்திற்குரிய ஆதனம் இதடங்கலும்.

தற்போது பவானந்தம் ஜெயமோகனும் பெண் சிவமணியும் இவ்வாதனத்தைத் தமது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர்மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித் துள்ளனர். எனவே இவ்வாதனத்திற்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகையில் பிரசுரித்த திகதியில் இருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத் தருமாறும், உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பவானந்தம் ஜெயமோகனும் பெண் சிவமணியும் என்னும் பெயரிற்கு மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும் என்பதுடன் இந்த ஆதனப் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாண மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதையும் அறியத் தருகின்றேன்.

**ஆணையாளர்,**
**மாநகர சபை,**
**யாழ்ப்பாணம்.**

(C-7176) **02.09.2023**

# காணி அபகரிக்க முயற்சித்தவர்கள் பொலிஸாரை கண்டதும் தப்பியோட்டம்

(மன்னார்)

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோவில் குளம் பகுதியில் சுமார் 15 ஏக்கர் அரச காணியை சட்ட விரோதமான முறையில் இனம்தெரியாத நபர்கள் நேற்று முன்தினம் வியாழக் கிழமை இரவு ஜே.சி.பி இயந்திரங்களை பயன்படுத்தி துப்புரவு செய்த நிலையில், பொலிஸார் மற்றும் இராணுவத்தினர் குறித்த பகுதிக்குச் சென்ற நிலையில், இயந்திரங்களை கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள கோவில் குளம் பகுதியில் உள்ள அரச காணியை இனம் தெரியாத நபர்கள் சிலர் ஜே.சி.பி இயந்திரங்களை பயன்படுத்தி காடுகளை அழித்து காணியை துப்புரவு செய்து கொண்டு இருப்பதாக இலுப்பைக் கடவை பொலிஸார் மற்றும் இராணுவத்தின் 541 ஆவது படைப்பிரிவுக்கு தகவல் வழங்கப்பட்ட நிலையில் இராணுவம் மற்றும் பொலிஸார் அப்பகுதிக்குச் சென்றனர்.

இதன்போது ஜே.சி.பி இயந்திரங்களை பயன்படுத்தி துப்புரவு செய்து கொண்டிருந்த நபர்கள் இராணுவம் மற்றும் பொலிஸாரை கண்ட நிலையில் ஜே.சி.பி இயந்திரங்களை அங்கேயே கைவிட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

இந்த நிலையில் காணியை துப்புரவு செய்ய பயன்படுத்திய 3 ஜே.சி.பி இயந்திரங்களை பொலிஸார் மீட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை இலுப்பைக் கடவை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (4-6-285)

# சான்றுப்பொருட்களை பெற்றுக்கொள்ளவும்

(முல்லைத்தீவு)

முல்லைத்தீவு மாவட்ட நீதிவான் நீதிமன்றில் வழக்கு இலக்கம் AR/405/23 உடைய சான்றுப்பொருளான மோட்டார் சைக்கிளின் உரிமையாளர் யாராவது இருந்தால் தகுந்த அடையாளத்தை உறுதிப்படுத்திப் பெற்றுக் கொள்ளுமாறும் அவ்வாறு உரிமை கோரப்படாத விடத்து 2 மாதங்களின் பின் எதுவிதமான முன் அறிவித்தல்கள் வழங்கப்படாது சான்றுப்பொருள் பகிரங்க ஏலவிற்பனை மூலம் விற்பனை செய்யப் படும் எனவும் நீதிமன்ற பதிவாளர் அறிவித்துள்ளார். (4-6)

# சட்டவிரோத மணல் அகழ்வால் ஆபத்தில் இரணைமடுக்குளம்



(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தில் தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டு வருகின்ற சட்டவிரோத மணல் அகழ்வு தொடர்பில் மாவட்டத்தில் நடைபெற்ற மூன்று ஒருங்கிணைப்பு குழு கூட்டங்களில் நீண்ட நேரம் பேசப்பட்டாலும் தொடர்ந்தும் பல பகுதிகளில் இருந்து நாளாந்தம் 200 முதல் 250 கியூப் மணல் அகழ்ந்தெடுத்து வெளி மாவட்டங்களுக்கு கொண்டு செல்லப்படுவதாக பொது அமைப்புக்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

கிளிநொச்சி மாவட்டத்தின் பாரிய நீர்ப்பாசன குளமான இரணைமடுக் குளத்தின் அணைக்கட்டு பகுதியை அண்மித்த கனகராயன், ஆற்றுப் படுக்கை, ஊரியான், முரசுமோட்டை, கண்டாவளை, புளியம்பொக்கணை, முட்கொம்பன் பூநகரி, அக்கராயன், கல்லாறு, சுண்டிக்குளம் உள்ளிட்ட மாவட்டத்தின் 18 இற்கும் மேற்பட்ட இடங்களில் இருந்து தொடர்ந்தும் சட்டவிரோதமான மணல் அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் இதனால் எதிர்காலத்தில் இரணைமடுக் குளம் பாரிய ஆபத்தை எதிர்நோக்கும் எனவும் ஏனைய பகுதிகளிலும் இது பல்வேறுபட்ட பாதிப்புக்களை ஏற்படுத்தும் என்றும் கிராமமட்ட பொது அமைப்புக் களால் சுட்டிக்காட்டப்பட்டுள்ளன. (4-6-315)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு மாகாண தென்னை முக்கோண வலயத்தை நோக்கி

கடந்த கால யுத்த நடவடிக்கைகளினால்வடக்கு மாகாண மக்களின் பொருளாதாரத்தின் ஒரு அங்கமான தென்னை வளம் முற்றாக அழிக்கப்பட்டு பாரிய இடப்பெயர்வுகளோடு 2009 இற்கு பின் படிப்படியாக குடியமர்ந்த மக்கள் தங்களுடைய பெருந்தோட்ட காணிகளில் வாழ்வாதார பயிராக தென்னை வளத்தினை அதிகரிப்பதில் படிப்படியாக அபிவிருத்தி அடைந்து கொண்டு வருகின்றனர்.

அதேவேளை பெருந்தோட்ட அமைச்சுக்கூடாக தென்னை பயிர்ச்செய்கை சபை பல்வேறு மானியங்களையும் விரிவாக்கல் வேலைத்திட்டங்களினையும் தொடர்ச்சியாக வழங்கி நலிவுற்ற தென்னை வளப்பாளர்களுக்கு உந்து சக்தியினை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது. இற்றை வரைக்கும் பெரும்பாலான பெண் தலைமைத்துவ குடும்பங்கள் தென்னை, தென்னை சார்ந்த தொழில்களில் மாத்திரம் ஈடுபட்டு தமது வாழ்வாதாரத் தேவைகளை பூர்த்தி செய்து கொண்டு வருகின்றனர்.

இற்றைவரைக்கும் வடமாகாணத்தில் 47000 ஏக்கர் காணிகளில் ஏறத்தாழ 141 மில்லியன் தேங்காய்களை உற்பத்தி செய்யும் அளவிற்கு வட மாகாணத்தினுடைய தென்னை வளம் தென்னை வளர்ப்பாளர்களால் விருத்தி செய்யப்பட்டுள்ளது. மேலும் வடமாகாணத்தில் குறிப்பாக யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு உட்பட்ட மாவட்டங்களில் உள்ள அனைத்து மக்களின் வீடுகளிலும் வீட்டுத் தோட்டமாகவோ அல்லது பெருந்தோட்டமா கவோ தென்னம்பிள்ளைகள் வளர்க்கப்பட்டு வருகின்றன.

வடமாகாணம் ஒரு உலர் வலயமாக இருந்தாலும் மாகாணத்தின் மண்தன்மை ஒரு சில இடங்களை தவிர்த்து தென்னை பயிர்ச்செய்கைக்கு உகந்ததாக இருப்பதாலும் வெப்பநிலை மற்றும் கால நிலை மாற்றங்களிற்கு ஏற்ப தென்னைப் பயிர்ச்செய்கை சபையின் தொடர்ச்சியான விரி வாக்கல் வேலைத்திட்டம் எமது மாகாண தென்னை வளர்ப்பாளர்களது அதிமுயற்சியின் காரணமாகவும்தென்னை வளர்ப்பானது வடமாகாணத்தில் குறிப்பிட்டதொரு உயர் நிலையை அடைந்து கொண்டு இருக்கின்றது.

எமது மாகாணத்தில் தென்னை வளர்ப்பிற்கு உகந்த சிறந்த மண்வளம் உள்ள நிலப் பகுதிகள் வன இலாக, முப்படையினர். தொல்லியல் திணைக்களத்தின் ஆளுகைக்குள்ளும் அமைந்துள்ளதுடன் மற்றும் புலம்பெயர் உறவுகளின் உரித்துக்காணிகள் பயன்படாத நிலையிலும் தரிசு நிலையிலும் இருப்பதும் வடமாகாண தென்னை வளத்தையும் நிலப் பரப்பையும் மேலும் மேலும் அதிகரிப்பதற்கு பாதகமாக அமைந்துள்ளது.

எனவே குறுகிய காலத்திற்குள் கூடுதலான அளவு தென்னம்பிள்ளைகளை வழங்கி தென்னை நடுகை நிலங்களை அதிகரித்து அதன் உற்பத்தியினை கூட்டுவதற்கான சாதகமான சூழ்நிலை இவ் 2023 ஆம் ஆண்டு இலங்கையின் 2 ஆவது முக்கோண வலயம் என்ற எண்ணக் கருவினை யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, மன்னார் சார்ந்த முக்கோண வலயத்திற்குள் கிளிநொச்சி, வவுனியா மாவட்டம் உள்ளடங்கியதாக இல்வலயம் உருவாக்கலின் மூலம் மேலதிகமாக 50,000 ஏக்கர் நிலப்பரப்பில் 3.5 மில்லியன் தென்னம்பிள்ளைகள் அரை ஏக்கரிலிருந்து 1ஏக்கர் வரை இலவசமாகவும் 1 ஏக்கருக்கு மேல் மானியம் அடிப்படையில் தொடர்ச்சியாக தென்னைப் பயிர்ச் செய்கை விரிவாக்கம் செய்வதற்காக வடமாகாண தென்னை முக்கோண வலயம் உருவாக்கப்பட்டுள்ளது. மூன்று வருட காலத்திற்குள் வழங்குவதற்கு நடவடிக்கை ஏற்படுத்தப்பட்டுள்ளது.

அத்துடன் தென்னை சார்ந்த கைத்தொழிலுக்கான முயற்சிகளும் தென்னை அதிகார சபையினாலும் புதிய தொழில் நுட்பங்கள் தென்னைப் பயிர்ச் செய்கை விரிவாக்கம் செய்வதற்காக வட மாகாண தென்னை முக்கோண வலயம் உருவாக்கப்பட்டுள்ளது பற்றிய பயிற்சிகள், புதிய வர்க்கங்கள் விநியோகம் செய்யும் முறையும் தென்னை ஆராய்ச்சி சபையால் மேற்கொள்ளப்பட விருக்கின்றது.

இப்புதிய 2 ஆவது தென்னை வலயமானது தென்னை சார்ந்த சர்வதேச சந்தையில் தேங்காய் பற்றிய கேள்வி அதிகரிப்பதோடு போட்டி போடும் தன்மையும் ஏற்படுத்துகின்றது. தற்போதைய நடைமுறையில் உள்ள தேங்காய் விநியோகமானது இந்த நாட்டின் சனத் தொகையின் கேள்விக்கு ஏற்ப போதுமானதாக இல்லை. இலங்கையில்உள்ள தென்னை சார்ந்த கைத்தொழிலுக்கு உரிய மூலப்பொருட்களின் பற்றாக்குறை காரணமாக உற்பத்தியின் அளவுக்குறைப்பு ஏற்றுமதி சந்தையில் பாரிய தாக்கத்தை ஏற்படுத்துகின்றது.

எனவே இத்திட்டத்தில் மாகாணத்தின் தென்னை வளத்தின் ஊடாக 6.2 மில்லியன் தேங்காய்களை தேசிய உற்பத்திக்கு வழங்குவதற்கான நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. மேலும் தென்னை வளர்ப்பாளர்களது தனிநபர் வருமான அதிகரிப்பு தென்னை நிலங்களின் உற்பத்தித்திறன், தரம் மேம்படுத்துவதோடு அந்நியச் செலாவணியானது 46.44 US டொலராக அதிகரிக்கச் செய்வதற்கும் இத்திட்டம் வழிவகுக்கின்றது.

அத்துடன் வடமாகாணத்தில் தென்னை சார் சூழல் நேயம், உல்லாச சுற்றுலாத் துறையின் வளர்ச்சிக்கும் சூழல் நேய ஒன்றி ணைந்த தென்னையோடு கால்நடை, மீன் வளர்ப்பு, தேனி வளர்ப்பு, ஊடு பயிர்கள் சார்ந்த பண்ணைகளை அதிகரிக்கச் செய்வது மட்டுமல்லாது வட மாகாணத்திற்குள் வெளிநாட்டு முதலீட்டாளர்களை கவர்வதற் கும் மாகாணத்தின் பெருந் தோட்ட துறையின் அனுகூலங்களை வடமாகாணத்தின் மக்கள் பெற்றுக் கொள்ளவும் வட மாகாணம் தவிர்ந்த மற்றைய மாகாணத்தோடு இணைப்பதற்கும் இத்திட்டம் வழி செய்கிறது.

வடமாகாணத்தின் தென்னை முக்கோண வலயமானது நாட்டின் தேசிய உற்பத்தியில் மாவட்டம், மாகாணம் சார்ந்து எதிர் காலத்தில் பாரிய பங்களிப்பு



தே.வைகுந்தன்,
பிராந்திய முகாமையாளர்,
யாழ்.பிராந்திய காரியாலயம்,
தென்னை பயிர்ச்செய்கை சபை,
பளை-கிளிநொச்சி

செய்வதற்கான நடவடிக்கைகளை பெருந்தோட்ட துறை சார்ந்து தென்னை பயிர்ச் செய்கைசபை, தென்னை அபிவி ருத்தி அதிகாரசபை, தென்னை ஆராய்ச்சி நிறுவனம் என்பன பாலமாக அமைவதோடு இத் திட்டத்தின் சாதக, பாதக நிலைமைகள் எதிர்கால சமூக, அரசியல், சூழல் என்பவற்றோடு தங்கியுள்ளது.

முதலாவது முக்கோண வலயத்தின் ஊடாக அம் மாவட்ட மக்கள் பெற்ற அனுகூலங்களையும் இரண்டாவது தென்னை முக்கோண வலயத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்துவதோடு இம் மாவட்ட மக்களும் பெறுவார்கள் என்ற எண்ணத்தோடு புரட்டாதி மாதம் இன்று சனிக்கிழமை தென்னை தின விழா அன்று 2 ஆவது தென்னை முக்கோண வலயம் அங்குரார்ப்பணம் செய்யப்பட இருக்கின்றது. அத்திட்டத்திற்கு வலுச் சேர்க்க வட மாகாண மாவட்ட தென்னை வளர்ப்பாளர்கள் அனைவரும் முழு விழிப்புணர்வு அடைய வேண்டும்.

# இராசிபலன்

02.09.2023
ஆவணி 16, சனிக்கிழமை
திருதியை பின்னிரவு 1.46 மணிவரை
உத்திரட்டாதி பிற்பகல் 5.34 மணிவரை

சுபநேரம் -3.05-4.35 மணிவரை
இராகுகாலம்-9.05-10.35 மணிவரை

சந்திராஷ்டமம்-
மகம், பூரம்.

**வளவன்**




வீட்டுத் தேவைகளைப் பூர்த்தி செய்து கொள்ளும் எண்ணம் உருவாகும், தொழில் ரீதியான பயணங்கள் அதிகரிக்கும் நாள், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.




புகழ் மிக்கவர்களின் சந்திப்பு இடம்பெறலாம், உடல் நலன் சீராகும், தடைப் பட்ட காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், ரோக பயமுண்டு.




வியாபாரத்தை விரிவு படுத்தும் எண்ணம் உருவாகும், இயல்பான வாழ்க்கையில் கௌரவமான சம்பவங்கள் இடம் பெறலாம், காரிய அனுகூலமுண்டு.




பிரபலமானவர்களின் சந்திப்பால் பெருமைகள் வந்து சேரலாம், வழிபாடு சிறப்பினைத் தரும், விடாமுயற்சிக்கு வெற்றி கிடைக்கும்,போசன சுகமுண்டு.




பிரபலமானவர்களின் அறிமுகம் கிடைக்கும், தொலைபேசி வழியில் ஆச்சரியம் தரும் தகவல்கள் வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.




நடப்பதெல்லாம் நன்மைக்கேயென நினைக்க வேண்டிய நாள், எடுத்த காரியங்களை பாதியில் விட்டு விடுவீர்கள், வீண் விரயங்கள் ஏற்படலாம்.




தொழில் நலன் கருதி எடுத்த முயற்சிகள் கைகூடும், ஒளிமயமான எதிர்காலத் திற்கு நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும், பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும்.




ஆரோக்கியத்தில் அக்கறை தேவை, சுபகாரியப் பேச்சுக்களில் முன்னேற்றம் காணும் நாள், நல்லவர்களின் தொடர்புகள் அதிகரிக்கும், வாக்கு மேன்மையுண்டு.




நீண்ட நாளைய விருப்பங்கள் நிறைவேறும் வாய்ப்புண்டு, உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், காரிய அனுகூலமுண்டு.




தன்னம்பிக்கையோடு செயற்படுவீர்கள், பொதுவாழ்வில் கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், பொருளாதார நிலையில் முன்னேற்றம் காணும் நாள்.




பெற்றோர் வழியில் பிரியம் கூடும், மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், புதிய பொருட்களை வாங்க முற்படுவீர்கள்.




நீங்கள் எதிர்பார்த்த காரியமொன்று நடைபெறுவதில் தாமதம் ஏற்படலாம், திடீர் பயணங்களால் திசை திருப்பங்கள் ஏற்படலாம், சயனசுகக் குறைவான நாள்.

கோபத்தோடு வருபவர்களிடத்தில் குளிர்ந்த முகத்தோடு பேசு. அவன் கோபம் தணிந்து விடும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கல்கியின் பாகம் - 2

# பொன்னியின் செல்வன்

காவியத் தொடர் 272





நாளைக்கு நல்ல சமயம் நோக்கி அவளிடம் நான் சொல்லுகிறேன். நீயும் தனியே பார்த்துக்கேள்!"

இவ்விதம் தியாகவிடங்கக் கரையர் கூறிவிட்டுக் கலங்கரை விளக்கை நோக்கிச் சென்றார்.

அவருடைய வீட்டுத் திண்ணையில் வந்தியத்தேவன் படுத்தான். அவனுடன் வந்த வைத்தியர் மகன் முன்னமே தூங்கிப் போய்விட்டான். வந்தியத்தேவனுக்கு நீண்ட பிரயாணம் செய்த களைப்பினால் தூக்கம் கண்ணைச் சுற்றிக் கொண்டு வந்தது விரைவில் தூங்கிப் போனான்.

திடீரென்று தூக்கம் கலைந்தது. கதவு திறக்கும் ஓசை கேட்டது. களைத்து மூடியிருந்த கண்ணிமைகளைக் கஷ்டப்பட்டு வந்தியத்தேவன் திறந்து பார்த்தான். ஓர் உருவம் வீட்டிற்குள்ளேயிருந்து வெளியேறிச் சென்றது தெரிந்தது. மேலும் கவனமாகப் பார்த்தான். அது ஒரு பெண்ணின் உருவம் என்று கண்டான். கலங்கரை விளக்கின் வெளிச்சம் அந்த உருவத்தின் மேல் விழுந்தது.

ஆ! அவள் பூங்குழலி தான்! சந்தேகமில்லை. அவள் என்னமோ நம்மிடம் சொன்னாளே? "நடுநிசியில் என்னைத் தொடர்ந்து வா! என் காதலர்களைக் காட்டுகிறேன்!" என்றாள். அது ஏதோ விளையாட்டுப் பேச்சு என்றல்லவா அப்போது நினைத்தோம்? இப்போது இவள் உண்மையிலேயே நள்ளிரவில் எழுந்து போகிறாளே? எங்கே போகிறாள்? காதலனையோ, காதலர்களையோ பார்க்கப் போவதாயிருந்தால் அப்படி நம்மிடம் சொல்லுவாளா? 'பின் தொடர்நது வந்தால், காட்டுகிறேன்' என்பாளா? இதில் ஏதோ மர்மமான பொருள் இருக்க வேண்டும்! அல்லது ஒரு வேளை எப்படியிருந்தாலும், பின் தொடர்ந்து போய் ஏன் பார்க்கக் கூடாது? நாளைக்கு இவளிடம் நயமாக பேசி இலங்கைக்குப் படகு தள்ளிக் கொண்டு வரச் சம்மதிக்கப் பண்ண வேண்டும். அதற்கு இப்போது இவளைத் தொடர்ந்து போவது உதவியாயிருக்கலாம். ஏதாவது இவளுக்கு அபாயம் வரக்கூடும்! அதிலிருந்து இவளைக் காப்பாற்றினால் நாளைக்கு நாம் கேட்பதற்கு இணங்கக் கூடும் அல்லவா?

வந்தியத்தேவன் சத்தம் செய்யாமல் எழுந்தான். பூங்குழலி போகும் வழியைப் பிடித்துக் கொண்டே போனான். சாயங்காலம் சேற்றுப் பள்ளத்தில் விழுந்த போது அடைந்த அனுபவம் அவனுக்கு நன்றாய் ஞாபகம் இருந்தது. அம்மாதிரி மறுபடியும் நேர்வதை அவன் விரும்பவில்லை. ஆகையால் பூங்குழலியை அவன் பார்வையிலிருந்து தவற விட்டுவிடக் கூடாது.

கலங்கரை விளக்கிலிருந்து கொஞ்ச தூரம் வரை வெட்ட வெளியாக இருந்தது. ஆகையால் பூங்குழலியின் உருவமும் தெரிந்து கொண்டிருந்தது. அவள் போன வழியே போவதில் கஷ்டம் ஒன்றும் இல்லை. அவள் அருகில் போய் பிடித்துவிட வேண்டும் என்று எண்ணி விரைவாக நடந்தான். ஆனால் அது சாத்தியப்படவில்லை.

இவன் வேகமாய் நடக்க நடக்க அவளுடைய நடை வேகமும் அதிகரித்துக் கொண்டே இருந்தது. இவன் பின் தொடர்ந்து வருவதை அவள் கவனித்ததாகவே தெரியவில்லை.

திறந்த வெளியைக் கடந்ததும் காடு அடர்ந்த மேட்டுப் பாங்கான பூமி வந்தது. நேரே அதன் பேரில் ஏறாமல் பூங்குழலி அந்த மேட்டைச் சுற்றிக்கொண்டே போனாள். மேடும் காடும் முடிந்த முனை வந்தது.

அந்த முனையை வளைத்து கொண்டு சென்றாள். வந்தியத்தேவனும் விரைந்து சென்று அந்த முனை திரும்பியதும் சற்றுத் தூரத்தில் அவள் போய்க் கொண்டிருப்பதைப் பார்த்தான்.

"நல்லவேளை!" என்று தைரியம் கொண்டான். ஆனால் அடுத்த கணத்தில் திடீரென்று அவளைக் காணவில்லை.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## நிலா சாட்சினு ஏமாத்திட்டாங்க

ஒரு மலைக் கிராமம். அங்க வாழுற மக்களுக்குனு சொந்தமா நிலம் எல்லாம் கிடையாது. அவங்க பாக'குறாங'க இடங்களில் விவசாயம் பண்ணி, அறுவடை செய்து சாப்பிடுவாங்க. சுற்றி மலைகள், காடுகள் அப்படித்தான் இருக்கும். அதனால இங்க விலங்குகளும் அதிகம். அந்த மக்களுக்கு விலங்குகளிடையே ரொம்ப பழக்க வழக்கங்கள் இருந்தது.

ஒரு கிராமவாசி காட்டில் ஒரு பகுதியில் சில கேரட்களை விவசாயம் செய்வதற்காக நட்டு வைத்தான். அந்த நிலம் அவனது அல்ல. பக்கத்தில் அழகான நீரோடை இருந்ததால் கேரட் விளைய ஏதுவான இடம் என நினைத்து முடிவு செய்து அந்த இடத்தை சரி செய்தான்.

மறுநாள் வந்து அதற்கான தண்ணீர் மற்றும்



களைகள் களைவது என வேலை பார்த்து கொண்டிருந்தான். அப்போது இதை பார்த்த நரி ஒன்று, விவசாயி நீ செய்வது சரி அல்ல இது என்னுடைய நிலம் நீ எப்படி இதில் விவசாயம் செய்வாய் என்றது. அவனுக்கு என்ன சொல்வது என்று தெரியவில்லை.

சட்டென யோசித்து உனக்கும் விளைச்சலில் பங்கு தருகிறேன் என்றான். நரியும் வேலை செய்யாமல் நமக்கு பலன் கிடைக்குது என எண்ணி ஒத்து [illegible]டது.

ஆமாம் என்ன விளைவிக்கிறாய் என்றது. விவசாயி ஒரு நிமிடம் யோசித்தான், அது வந்து கேரட். இதன் வேர்களை நான் எடுத்து கொள்கிறேன். செழிப்பாக வளரும் இலைகளை நீ எடுத்து கொள் என்றான்.

நரி, வேர்களால் உனக்கு என்ன பயன், என்றது. விவசாயி அதை மலை அடிவாரத்தில் வாழ்வபர்கள் வாங்குவார்கள் என்றான். அது சரி, ஏன் வெட்டி கதை, உன்னை எப்படி நம்புவது என்றது. விவசாயி டக்கென வானத்தில் இருந்த நிலாவை காண்பித்து நிலா சாட்சியாக என்றான். நரியும் நம்புகிறேன் என்று சென்றது.

விவசாயி பாடுபட்டு அறுவடை நாளை நெருங்கினான். அவன் அறுவடை செய்து கொண்டிருக்கும்போது நரி அங்கு வந்தது. விவசாயி நரிக்கு இலைகளை கொடுத்து விட்டு வேர்களை தன் பக்கம் வைத்து கொண்டான். விவசாயி கிளம்பும் நேரத்தில் நரி, ஒரு நிமிடம் நில் அந்த வேரை என்னிடம் கொடு நான் ருசி பார்க்கிறேன் என்றது. .

கேரட்டை கடித்த நரிக்கு விவசாயி தன்னை ஏமாற்றிவிட்டான் என தோன்றியது. இந்த வேர்கள் இனிப்பாக இருக்கிறது, நீ என்னை ஏமாற்றி விட்டாய், இந்த இலைகளில் ருசி இல்லை. இனிமேல் என் நிலத்தில் நீ வரக்கூடாது என மிரட்டியது.

விவசாயியும் சரி என்று சென்றான். கொஞ்ச நாள் கழித்து நரி , விவசாயியை தன் நிலத்தில் பார்த்தது. அதற்கு கோபமாக வந்தது இப்போது என்ன விளைவித்திருக்கிறாய், பூக்களாக இருக்கிறது என்றது. சரி இந்த முறை எனக்கு வேர்கள் வேண்டும் என்றது நரி. விவசாயியும் சரி என்றான். உன்னை எப்படி நம்ப என்றது நரி.

விவசாயி மீண்டும் நிலவின் சாட்சியாக உனக்கு அளித்த வாக்கின் படி இந்த முறை வேர்கள் உன்னுடையது என்றான். நரியும் சென்றது.

அறுவடை நாளும் வந்தது. நரி இந்த முறை கவனமாக எல்லா வேர்களையும் வாங்கி கொண்டது. அவனும் அறுவடை செய்தவற்றை எடுத்து வைத்து கொண்டான். நரி, எதற்கும் வேரை சாப்பிட்டு பார்க்கலாம் என சாப்பிட்டது. இது என்ன இப்படி இருக்கிறது என்றது.

விவசாயி அது கடுகின் வேர்கள். இந்த முறை நான் பயிரிட்டது கடுகு என்றான். நரிக்கு கோபம் கொந்தளித்தது. இருந்தாலும் ஏமாந்தது தான் தான் என வருந்தியது. நிலா சாட்சியாகனு சொல்லியே ஏமாத்திட்டானே என வருந்தியது நரி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நியாயம் இன்னதென்று அறிந்தும் அதை நீ செய்யாதிருப்பது கோழைத்தனம்.
~ கோன்பு தஸன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## நீதிமன்றை அவமதிப்புச் செய்த தொல்லியல் திணைக்களம்

குருந்தூர்மலை விடயத்தில் தொல்லியல் திணைக்களம் நீதிமன்றக் கட்டளையை மீறியுள்ளதாக முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றத்தின் கட்டளையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அதாவது குருந்தூர்மலையில் எந்தவொரு கட்டுமானப் பணியும் இடம்பெறக்கூடாது என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் கட்டளையிட்டிருந்தது.

எனினும் நீதிமன்றத்தின் கட்டளையையும் மீறி குருந்தூர்மலையில் விகாரை அமைக்கும் பணி இடம்பெற்றுள்ளது.

இவ்விகாரை அமைக்கின்ற விடயத்தில் தொல்லியல் திணைக்களம் நீதிமன்றக் கட்டளையை மீறிச் செயற்பட்டுள்ளது என முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் நேற்று முன்தினம் விடுத்த கட்டளையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

ஓர் அரச அமைப்பாக இருக்கக்கூடிய தொல்லியல் திணைக்களம் நீதிமன்றத்தின் கட்டளையை மீறிச் செயற்பட்டுள்ளமை பாரதூரமான குற்றமாகும்.

நீதிமன்றத்தின் கட்டளையை சிரமேற்கொண்டு செயற்பட வேண்டிய ஒரு திணைக்களம் நீதிமன்றத்தின் கட்டளையை மீறிச் செயற்படுவதென்பது நீதித்துறையை அவமதிக்கும் செயலாகும்.

தவிர, ஓர் அரச அமைப்பு இவ்வாறு நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறிச் செயற்படுவதற்கு தொல்லியல் திணைக்களம் பேரினவாத சக்திகளின் ஏவலைச் செய்கின்ற அமைப்பாக இருப்பதுதான் மூலகாரணம் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இதுதவிர, இங்கு நீதிமன்றத்தின் தீர்ப்பை மீறிச் செயற்படுதல் என்பதற்குள் இனவாதச் சிந்தனையோடு தொல்லியல் திணைக்களம் செயற்படுகிறதென்ற உண்மையும் நிரூபணமாகிறது.

இது ஒருபுறமிருக்க குருந்தூர்மலை தொடர்பில் நீதிமன்றம் விடுத்த உத்தரவை அமுலாக்குகின்ற கடமையில் இருந்து பொலிஸாரும் விலகியுள்ளனர் என்ற விடயத்தையும் முல்லைத்தீவு நீதவான் நீதிமன்றம் சுட்டிக்காட்டியுள்ளது.

அதாவது நீதிமன்றத்தின் உத்தரவை நிறைவேற்றுகின்ற கடமைப் பொறுப்பில் இருந்து முல்லைத்தீவு பொலிஸார் விலகியுள்ளனர் என்ற நீதிமன்றத்தின் குறிப்புரையானது, பொலிஸ் சேவையின் பக்கச்சார்பை துலாம்பரப்படுத்தியுள்ளது.

மேலும் பெளத்த மத சார் விடயங்களில் நீதிமன்றத்தின் உத்தரவைக் கடந்து பொலிஸார் மதசார்புடையவர்களாக இருக்கின்றனர் என்ற யதார்த்தம் இப்போது பகிரங்கப்படுத்தப்பட்டுள்ளது.

எதுஎவ்வாறாயினும் நீதிமன்றத்தின் கட்டளையை மீறியதன் மூலம் நீதிபரிபாலனத்தை அவமதிப்புச் செய்த தொல்லியல் திணைக்களம் மற்றும் நீதிமன்ற உத்தரவை நிறைவேற்றுகின்ற பொறுப்பில் இருந்து விலகிய பொலிஸார் மீது வழக்குத் தாக்கல் செய்து நீதிமன்றை அவமதிப்புச் செய்த குற்றத்துக்கான தண்டனையை சம்பந்தப்பட்டவர்களுக்கு வழங்க உரிய சட்ட நடவடிக்கையை உரியவர்கள் எடுக்க வேண்டும்.

# கச்சதீவு மீட்பு விவகாரம்

## நீதிமன்றம் தலையீடு செய்ய முடியாது என அறிவிப்பு

(சென்னை)

கச்சதீவு மீட்பு விவகாரம் என்பது மத்திய அரசாங்கத்தின் கொள்கை ரீதியான முடிவு என்பதால், அதில் நீதிமன்றம் தலையீடு செய்ய முடியாது என சென்னை உயர் நீதிமன்றின் மதுரைக்கிளை அறிவித்துள்ளது.

சென்னை மீனவர்கள் நலச்சங்கத்தைச் சேர்ந்த பீட்டர்ராயன் சென்னை உயர் நீதிமன்ற கிளையில் மனுவொன்றைத் தாக்கல் செய்திருந்தார்.

அவரது மனுவில், ராமேஸ்வரத்தின் ஒரு பகுதியாக கச்சத்தீவு இருந்த நிலையில், 1974-ல் இந்தியா மற்றும் இலங்கை இடையே ஏற்படுத்திக் கொள்ளப்பட்ட ஒப்பந்தத்தின் அடிப்படையில் கச்சதீவு இலங்கையிடம் கையளிக்கப்பட்டதாக சுட்டிக்காட்டியிருந்தார்.

அந்த ஒப்பந்தத்தில் பாரம்பரியமாக மீன்பிடி தொழிலில் ஈடுபடும் மீனவர்களுக்கு எந்த இடையூறும் ஏற்படுத்தக் கூடாது எனவும் கூறப்பட்டிருந்தது.

எனினும் அங்கு செல்லும் தமிழக மீனவர்கள், இலங்கையில் தாக்கப்படுவதுடன் தொடர்ச்சியாக கைது செய்யப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டிருந்தது.

எனவே, 1974-ம்ஆண்டில் இந்தியா - இலங்கை ஒப்பந்தத்தை ரத்து செய்து கச்சதீவை மீட்க மத்திய அரசாங்கத்திற்கு உத்தரவை பிறப்பிக்குமாறு பீட்டர்ராயன் கோரிக்கை விடுத்திருந்தார்.

தலைமை நீதிபதி கங்கபுர்வாலா, நீதிபதி சி.குமரப்பன் ஆகியோர் அடங்கிய குழாமின் அமர்வில் மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது.

இந்த நிலையில், கச்சதீவு மீட்பு விவகாரம் மத்திய அரசின் கொள்கை ரீதியான முடிவு, அதில் நீதிமன்றம்தலையிட முடியாது.

எனவே இந்தவழக்கை மேலும் முன்கொண்டு செல்ல முடியாது என அறிவித்து மனுவை சென்னை உயர் நீதிமன்றின் மதுரை கிளை தள்ளுபடி செய்துள்ளது. (ம-7,9)

## மண்டைதீவு, ஊர்காவற்றுறையில் நீர் விநியோக ஒழுங்கில் மாற்றம்

மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களில் நீர் விநியோக ஒழுங்கில் மாற்றம் செய்யப்பட்டுள்ளதாக தேசிய நீர் வழங்கல் அதிகாரசபையின் யாழ். பிராந்திய முகாமையாளர்வே.உதயசீலன் அறிவித்துள்ளார்.

அதன்படி நாளை மறுதினம் திங்கட்கிழமை முதல் மண்டைதீவு மற்றும் ஊர்காவற்றுறை பிரதேசங்களுக்கு மூன்று நாட்களுக்கு ஒருதடவை மட்டுமே நீர் விநியோகம் மேற்கொள்ளப்படும் என அறிவிக்கப்பட்டுள்ளது. (ம-7,9)

## சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம்

### 20 நாட்களுக்கு பூட்டு

(கொழும்பு)

சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தின் பெற்றோல் உற்பத்தி பிரிவின் உற்பத்தியை எதிர்வரும் 18 ஆம் திகதி முதல் ஒக்டோபர் மாதம் 8 ஆம் திகதி வரை இடைநிறுத்த திட்டமிடப்பட்டுள்ளது.

நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் மின்சக்தி மற்றும் எரிசக்தி இராஜாங்க அமைச்சர் டி.வி. சானக இதனைத் தெரிவித்தார்.

எவ்வாறாயினும், அந்த காலப்பகுதியில் எரிபொருள் விநியோகத்தை தட்டுப்பாடு இல்லாமல் பராமரிக்க தேவையான எரிபொருள் இருப்புக்கள் மற்றும் ஆர்டர்கள் ஏற்கனவே பூர்த்தி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது. (ம-7,9)

## துப்பாக்கிச்சூடு ஒருவர் படுகாயம்

(கொழும்பு)

கொழும்பு - மாளிகாவத்தை பகுதியில் இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

மோட்டார் சைக்கிளில் வந்த இருவரே துப்பாக்கிச் சூடு நடத்தியுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

மேலும் துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த நபர் கொழும்பு தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றும் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ம-7,9)

## கூரியர் சேவையாளர் மீது இளவாலையில் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)

இளவாலை பொலிஸ் பிரிவிற்குட்பட்ட இளவாலை பகுதிக்கு கூரியர் சேவையில் பொருட்களை வழங்க வந்த இளைஞன் மீது தாக்குதல் நடாத்தப்பட்டுள்ளது.

இச்சம்பவம் குறித்து மேலும்தெரியவருகையில்,

கூரியர் நிறுவனத்தில் பணிபுரியும் ஊழியர் ஒருவர், ஒன்லைனில் பதிவு செய்யப்பட்ட பொருளை வழங்குவதற்காக நேற்று முன்தினம் இளவாலை பகுதிக்கு வந்துள்ளார்.

அவர் குறித்த பொருளை வழங்கிவிட்டு பணத்தினை கேட்டவேளை வீட்டினுள் அழைத்துச் சென்று சரமாரியாக தாக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் தாக்குதலுக்கு உள்ளான நபர் இளவாலை பொலிஸ்நிலையத்தில் முறைப்பாடு பதிவு செய்துள்ளார். தாக்குதல் நடாத்தியவரை கைது செய்த பொலிஸார் அவரை மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்தியவேளை, அவரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிவான் உத்தரவிட்டார். (ம-7,9,104)

## மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை ஞாயிற்றுக்கிழமை காலை 8.30 மணியிலிருந்து மாலை 5.00 மணிவரை **யாழ். பிரதேசத்தில்** ஆவரங்கால் சந்தை, ஆவரங்கால் சிவன்கோவில், கலைமகள் சந்தி, புத்தூர்-மட்டுவில் வீதி, புத்தூர், நாவற்காடு அச்சுவேலி, பெரியபொக்கணை, ஊறணி, வாதரவத்தை, வீரவாணி செல்வ மஹால் திருமண மண்டபம், கொக்குவில் சந்தி, பூநாறி சந்தி, சிவப்பிரகாசம் வீதி பொக்ஸ் ரெஸ்ட் (பிறைவேட்) லிமிடெட், அச்சு கூடம்-கே.கே.எஸ் வீதி, ஞானபண்டிதா பாடசாலை, கொக்குவில், நந்தாவில் ஆகிய இடங்களிலும் **கிளிநொச்சி பிரதேசத்தில்** சிவநருட்செல்வன் அரிசி ஆலை, உருத்திரபுரம் பலநோக்கு கூட்டுறவு சபை அரிசி ஆலை, சிவநகர், உருத்திரபுரம், உருத்திரபுரம் கிழக்கு இந்துக் கல்லூரி, 66 ஆம் பிரிவு இராணுவ முகாம்-பூநகரி, அரசபுரம், 4 ஆவது மைல் கல்-பூநகரி, அரசபுரம், செல்லையாதீவு, ஞானிமடம், கௌதாரிமுனை, காஞ்சிபுரம், கருக்காய்த் தீவு, கொல்லக்குச்சி தம்பிராய், குஞ்சுப்பரந்தன், முட்கொம்பன், நல்லூர், பூநகரி, நெடுங்குளம் பள்ளிக்குடா, நேரடம்பன், நெற்பிலவு ஓவசியர் கடை சந்தி, பள்ளிக்குடா, பள்ளிக்குடா சுனாமித்திட்டம், பரமங்கிராய், செம்மணகுன்று, சின்ன பல்லவராயன் கட்டு, தம்பிராய், தரணிக் குடியிருப்பு, வாடியடி, வெட்டுக்காடு (கௌதாரி முனை), வீரையடி, விநாசியோடை (கௌதாரிமுனை) ஆகிய இடங்களிலும் மின்சாரம் தடைப்படும்.

## விண்ணப்பம் கோரல்

(யாழ்ப்பாணம்)

இலங்கை திறந்த பல்கலைக்கழகத்தின் யாழ்ப்பாண பிராந்தியத்தால் நடாத்தப்படும் முகாமைத்துவத்தில் குறுகிய கால கற்கைநெறிக்கு (Short Course in Human Resource Management) விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன. விண்ணப்பிக்க விரும்புவர்கள் எதிர்வரும் 09-10-2023 க்கு முன்னர் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்தில் விண்ணப்ப படிவத்தை பெற்று விண்ணப்பிக்கலாமென யாழ்ப்பாண பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார்.

மேலதிக தகவல்களைப் பெற விரும்புவர்கள் யாழ்ப்பாண பிராந்திய நிலையத்துடன் (021-222 3374) தொடர்பு கொள்ளுமாறு மேலும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளது. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கைப் பொருளாதார நெருக்கடியும் கடன் மறுசீரமைப்பும் ஒரு தொகுப்பு



22

கலாநிதி க.தவலிங்கம்
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.
தவிசாளர்- எல்லை நிர்ணய ஆணைக்குழு.

கொடுப்பனவு விநியோகித்தலில் முறையான ஒருங்கிணைப்பு காணப்படாமையையும் சில பிரதேசங்களில் வாய் வார்த்தைகளை நம்பியே இத்தகைய கொடுப்பனவு விநியோகம் இடம்பெறுவதனையும் காணமுடிகிறது. கொடுப்பனவு தேவைப்பட்ட 28 கிராமவாசிகளுக்கு எவ்விதமான விளக்கமும் வழங்கப்படாமல் மறுக்கப்பட்டு சரியான ஒருங்கிணைப்பு பொறிமுறை இல்லாத நிலையில் தேவையில்லாது மற்றவர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

இந்தப் பின்னணியில் நான்கு காரணங்களுக்காக கொவிட்-19 இனால் ஏற்பட்ட பொருளாதாரச் சிரமங்களைக் குறைப்பதில் இலங்கை அரசு தோல்வி கண்டிருந்தது. முதலாவது, அரசு ஒரு வெற்று அரசாக மாறி தான் ஆற்ற வேண்டிய வகிபங்கினை தனியார் மற்றும் சர்வதேச நிறுவனங்கள் ஆற்றுகின்ற நிலைமையினைச் சாதாரண விடயமாக கண்டு கொண்டமையினை அவதானிக்க முடிகிறது.

அத்தோடு பெருந்தொற்றிலிருந்து விடுபடுவதற்குத் தமது சொந்த உத்திகளைப் பிரஜைகள் பயன்படுத்த மறைமுகமான வகையில் பிரஜைகளைத் தள்ளுவதனையும் காணலாம். இவ்வாறு மக்களைப் பாதுகாக்கின்ற பிரதான பொறுப்பிலிருந்து அரசு விலகிக்கொள்கின்ற நிலைமையும் காணப்படுகின்றது. இதனால், அரசு தனது சேமநலம் சார்ந்த மூலக்கூறுகளிலிருந்து விடுபடுவதோடு அவசரகால நிலைமையில் பிரஜைகளே அவற்றுக்குப் பதிலளிக்க வேண்டிய நிலைக்கும் தள்ளியுள்ளது. அடுத்ததாக பெருந்தொற்றுச் சூழலில் நேரடியாக எவ்விதமான வகையிலும் பொறுப்பேற்காத கொள்கைகளை உருவாக்குவதற்கு அதிகளவு முயற்சிகளை மேற்கொண்டிருந்தது.

இது பொருளாதாரப் பிரச்சினையைக்கொண்ட இலங்கை போன்ற நாடுகளுக்கு பொருத்தமற்றதாகும். மூன்றாவதாக, உதவியினை விநியோகத்தல் மற்றும் நிர்வாகம் செய்தல் போன்றவற்றில் தவறான நிர்வகிப்பும் பொருத்தமற்ற தன்மையும் காணப்பட்டமையானது பெருந்தொற்றுக் காலத்தில் சமூகப் பாதுகாப்பு நன்மைகளைக் கொண்டிராத சமூகத்தினை மிகக்கடுமையாகப் பாதித்ததெனலாம். இறுதியாக அரசானது தாறுமாறான வகையில் மக்களுக்குப் பாதிப்பினை ஏற்படுத்தும் கொள்கைகளை தன்னிச்சையான முறையில் உருவாக்குகிறது போன்று தென்படுகிறது. முடிவாக இலங்கையின் சேமநல அரசானது எவ்வாறு மிக வினைத்திறனானது என்பதனை எடுத்துக்காட்டுவதற்கான ஒரு பரீட்சையாகப் பெருந்தொற்றுக் காணப்பட்டது என்பதோடு ஒரு தேசமாக நாம் எவ்வாறு தோல்வியடைந்தோம் என்பதனையும் எடுத்துக்காட்டியுள்ளது.

(இத் தகவல்கள் நிபுணிகா ஓ. லேகம்வசம என்பவரால் எழுதப்பட்ட வாழ்வா அல்லது வாழ்வாதாரமா? இலங்கையின் கொவிட்-19 பதில் நடவடிக்கையில் தேய்ந்து போகும் சேமநலன் என்ற கட்டுரையிலிருந்து தொகுக்கப்பட்டவையாகும்)

**லெபனான் பிரச்சினை பற்றி.....**

தற்போது இலங்கைக்கு ஏற்பட்டுள்ள நிலைமைதான் லெபனானில் ஏற்பட்டது. அங்கு என்ன நடந்தது என்பது பற்றிப் பார்ப்போம்.

மத்திய தரைக்கடலின் தென் கரையில் அமைந்திருக்கிறது லெபனான். தலைநகரம் பெய்ரூட். இந்த நாட்டின் வடக்கிலும் கிழக்கிலும் சிரியாவும், தெற்கில் இஸ்ரேலும், மேற்கில் மத்திய தரைக்கடலும் இருக்கின்றன. செலாவணிக்கு, லெபனான் பவுண்ட் என்று பெயர். பிரதமராக நஜீப் மிகாடி, ஜனாதிபதியாக மைக்கேல் ஆன் உள்ளனர். மக்கள் தொகை 76 லட்சம். பரப்பளவு 10,452 சதுர கிலோ மீற்றர். லெபனான் என்றால் வெண் மலை என்று பொருள். இந்த நாட்டின் மலை வெண்மையான பனிப்படலத்தால் போர்த்தப்பட்டிருக்கிறது.

நீண்ட காலம் பிரான்ஸ் நாட்டின் நிர்வாகத்தில் இருந்தது. 1926இல் குடியரசாக அறிவிக்கப்பட்டது. 1943 இல் சுதந்திரம் பெற்றது. அரபு நாடுகளின் கலாசாரத்தைப் பின்பற்றுகிறது. எனினும், பிற அரபு நாடுகளிலிருந்து வித்தியாசமானது. மலைப்பாங்கான இந்தப் பகுதி பல்வேறு மத, இனக் குழுக்களுக்கு நீண்ட காலம் புகலிடமாகப் பயன்பட்டது. மக்கள் அடர்த்தி மிகுந்த இந்த நாட்டில் கல்வியறிவு பெற்றவர்கள் எண்ணிக்கையும் அதிகம். இயற்கை வளங்கள் குறைவு என்றாலும் மத்திய கிழக்கில் முக்கியமான வணிக மையமாகவும், கலாசார மையமாகவும் திகழ்ந்து வருகிறது.

லெபனானில் பல்வேறு இன, மத, சமூகக் குழுக்கள் இணைந்து வாழ்கின்றன. போனீஷியர்கள், கிரேக்கர்கள், ஆர்மீனியர்கள், அரபுகள், குர்துகள் இவர்களில் முக்கியமானவர்கள். அரபுதான் அரசு மொழி. பிரெஞ்சு, ஆங்கிலம் ஆகிய மொழிகளும் பேசப்படுகின்றன. முஸ்லிம், கிறிஸ்தவ மதங்கள் பின்பற்றப்படுகின்றன. முஸ்லிம்களில் சன்னி, ஷியா இருவரும் மக்கள் தொகையில் தலா கால் பங்கு இருக்கின்றனர். ரோமன் கத்தோலிக்கர்களில் மரோனைட் பிரிவைச் சேர்ந்தவர்கள் லெபனானில் அதிகம். இவர்கள் மக்கள்தொகையில் ஐந்தில் ஒரு பங்கு. கிரேக்க கத்தோலிக்கர்களும் கிரேக்க ஆர்தடாக்ஸ் பிரிவினரும் கணிசமான எண்ணிக்கையில் வாழ்கின்றனர். இவர்களில் ட்ரூஸ் என்ற பிரிவினர் எண்ணிக்கையில் குறைவு.ஆனால் அரசியல், பொருளாதார செல்வாக்கு மிக்கவர்கள். யூதர்களும் மிகக் குறைந்த எண்ணிக்கையில் வாழ்கின்றனர்.

மக்களில் பெரும்பாலானவர்கள் கடலோரத்திலும், மிகச் சிலர் உள் நாட்டிலும் வாழ்கின்றனர். தண்ணீரும் நிலமும் கிடைத்த இடங்களில் கிராமங்கள் அமைக்கப்பட்டுள்ளன. வடக்கில் உள்ள கிராமவாசிகள் பணக்காரர்கள், தெற்கில் வசிப்பவர்கள் ஏழைகள். நிலம் வளம் குறைவானது.

இதன் வரலாற்றில் செப்டம்பர் 1 1920 - பெரிய லெபனான், 23 மே 1926 - அரசியலமைப்பு, 22 நவம்பர் 1943-சுதந்திரம் அறிவிக்கப்பட்டது. 24 ஒக்டோபர் 1945 பிரெஞ்சு ஆணை முடிவு.17 ஏப்ரல் 1946 - பிரெஞ்சு படைகள் திரும்பப் பெறுதல். 24 மே 2000 - இஸ்ரேலிய படைகள் திரும்பப் பெறப்பட்டன. 30 ஏப்ரல் 2005- சிரியப் படைகள் திரும்பப் பெறப்பட்டன.

மரோனியக் கிறித்தவர்களுக்கும் பாலத்தீன விடுதலை இயக்கத்தினருக்கும் 1975இல் சண்டை மூண்டது பிறகு இடதுசாரிகள், அரபுசார் குழுக்கள் பாலத்தீன விடுதலை இயக்கத்தினருடன் இணைந்து கொண்டனர். இந்தச் சண்டையின்போது கூட்டணிகள் விரைவாகவும் எதிர்பாரா வண்ணமும் மாறிக்கொண்டு வந்தன. மேலும் இஸ்ரேல்,சிரியா போன்ற வெளிநாட்டு சக்திகளும் போரில் ஈடுபட்டு பல்வேறு தரப்பினருடன் இணைந்து சண்டையில் பங்கேற்றனர். ஐக்கிய நாடுகளின் அமைதி காக்கும் படை, அமைதிக்கான பன்னாட்டு படை ஆகியனவும் லெபனானில் நிறுத்தப்பட்டன.

1989இல் ஏற்பட்ட டையீஃப் உடன்பாட்டை(Taif Agreement), அடுத்து சண்டை முடிவுக்கு வந்தது. ஜனவரி 1989இல் அரபு நாடுகள் கூட்டமைப்பு நியமித்த குழு சண்டைக்கான தீர்வுகளை முன்வைத்தது. மார்ச் 1991இல் பாராளுமன்றம் மன்னிப்புச் சட்டத்தை செயலாக்கியது இதன்படி இச்சட்டத்திற்கு முந்தைய அனைத்து அரசியல் குற்றங்களுக்கும் மன்னிப்பு வழங்கப்பட்டது. மே 1991 இல் ஆயுதக் குழுக்கள் கலைக்கப்பட்டன. ஹிஸ்புல்லா இயக்கம் மட்டுமே விலக்காக இருந்தது. லெபனானின் படைத்துறை மட்டுமே சமயச்சார்பற்ற ஒரே ஆயுத மேந்திய அமைப்பாக மீளமைக்கப் பட்டது. இருப்பினும் சண்டைக்குப் பின்னரும் சன்னிகளுக்கும் சியாக்களுக்கும் இடையே சண்டைகள் இருந்து வந்தன.

1975-1990 லெபனான் உள்நாட்டு போர் இறுதி உடன்படிக்கைபடி, ஜனாதிபதி பதவி கிறிஸ்தவருக்கும், பிரதமர் பதவி சன்னி இஸ்லாமியருக்கும், சபாநாயகர் பதவி ஷியா இஸ்லாமியருக்கும் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இது போன்ற இட ஒதுக்கீடு, அமைச்சரவை, அரசு நிர்வாகத்திலும் நிலவுவதால், ஊழல் புரிவோர், தம் இனம் சார்ந்தவர்களை தூண்டிவிட்டு தப்பும் சூழல் இருப்பதாகவும் குற்றம் சாட்டப்படுகிறது.

சிரியா, ஹிஸ்புல்லா, இஸ்ரேல். இம்மூன்று சக்திகள்தான் லெபனான் அரசியலை ஆட்டுவிக்கின்றன. லெபனானில் 52 சதவிகிதம் முஸ்லீம்கள் இருக்கின்றனர். ஷியா பிரிவைச் சேர்ந்தவர்களால் பெரிதும் ஆதரிக்கப்படும் சிரியா, தனக்கான அடித்தளத்தை லெபனானில் வலுவாக ஊன்றியுள்ளது. பெய்ரூட்டில் சிரியாவை மீறி ஒரு துரும்பைக்கூட லெபனான் அரசால் அசைக்க முடியாது. சிரியாவில் நடைபெறும் உள்நாட்டுப் போரில், அந்நாட்டு ஜனாதிபதி பஷர் அல் அசாத்க்கு ஆதரவாக போர் புரிய பலரும் லெபனான் வழியைப் பயன்படுத்துகின்றனர். இதை எதிர்த்து சன்னி பிரிவினரால் நடத்தப்படும் ஐ.எஸ்.ஐ.எஸ் தீவிரவாத அமைப்பைச் சேர்ந்தவர்கள் துப்பாக்கி தூக்குவதால் லெபனான் சிக்கித் திண்டாடுகிறது.

இவை எல்லாம் நாட்டின் பொருளாதாரத்தை வெகுவாகச் சீர்குலைத்தன. அதுதான் இப்போது விஸ்வரூபமெடுத்திருக்கிறது.

தற்போதும் லெபனானில் கடுமையான பொருளாதார நெருக்கடி நிலவுகிறது. மக்களில் பெரும்பாலானவர்கள் வறுமையில் சிக்கி உழல்கின்றனர். வேலை கிடைக்காமல், உண்பதற்கு உணவுப் பண்டங்கள் கிடைக்காமல் தவிக்கின்றனர். வாழ்வதற்கே அஞ்சும் நரகமாகிவிட்டது. பெரும்பாலான மக்களுக்கு, பலர் சொல்லவே முடியாத நோய்த் தொல்லைகளுக்கும் பட்டினிக்கும் ஆளாகியுள்ளனர்.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## உழவு இயந்திரம்...

மொரு சிறுவன் படுகாயமடைந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

இதில் அதே பகுதியைச் சேர்ந்த ச.சதுசன் (வயது-15) என்ற சிறுவனே உயிரிழந்தவராவார்.

நேற்று முன்தினம்மாலை இடம்பெற்ற குறித்த விபத்துச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது,

வவுனியா, பூவரசங்குளம், மடுக்குளம் பகுதியில் உள்ள குளத்தின் அணைக்கட்டில் மண் ஏற்றியவாறு உழவு இயந்திரம் ஒன்று மாலை பயணித்துள்ளது. இதன்போது திடீரென சாரதியின் கட்டுப்பாட்டை இழந்த உழவு இயந்திரம் முற்றாக குடை சாய்ந்து விபத்திற்குள்ளாகியது.

இதன்போது, உழவு இயந்திரத்தின் பின்பகுதியில் அமர்ந்திருந்த இரு சிறுவர்கள் படுகாயமடைந்த நிலையில் அங்கிருந்தவர்களால் மீட்கப்பட்டு பூவரசங்குளம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

அங்கிருந்து மேலதிக சிகிச்சைக்காக குறித்த இரு சிறுவர்களும் வவுனியா வைத்தியசாலைக்கு அனுப்பி வைக்கப்பட்டனர்.

எனினும், குறித்த இரு சிறுவர்களில் ஒரு சிறுவன் வைத்தியசாலைக்கு கொண்டு செல்வதற்கு முன்னரே மரணித்துள்ளதாக வவுனியா வைத்தியசாலை வைத்தியர்கள் தெரிவித்தனர்.

குறித்த சம்பவம் தொடர்பாக பூவரசங்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9,104,250)

## கண்ணை...

ஒருவர் படுகாயமடைந்ததோடு தனது ஒரு கண்ணையும் இழந்த நிலையில் வவுனியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

வவுனியா, சிதம்பரபுரம் பகுதியில் உள்ள காட்டுப் பகுதிக்கு சென்ற குடும்பஸ்தர் மீதே நேற்று கரடி தாக்கியுள்ளது.

கரடியின் தாக்குதலுக்கு உள்ளான குறித்த குடும்பஸ்தர் கண் ஒன்றை இழந்துள்ளதுடன், தலையிலும் பலத்த காயங்களுக்கு உள்ளாகியுள்ளார். கரடியின் பிடியில் இருந்து தப்பி வந்த அவரை அயலவர்கள் மீட்டு வவுனியா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

குறித்த சம்பவம் தொடர்பில் வவுனியா, சிதம்பரபுரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (ம-7,9,250)

## யூனியன் கல்லூரி...

யாழ்ப்பாணம் - தெல்லிப்பழை யூனியன் கல்லூரி முன்பாக நேற்று வெள்ளிக்கிழமை காலை பாடசாலை மாணவர்களின் பெற்றோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலை பிரதான நுழைவாயில் முன்பாக ஒன்றுகூடிய பெற்றோரே இவ்வாறு போராட்டத்தில் ஈடுபட்டனர்.

பாடசாலையில் கற்பிக்கும் ஆசிரியரொருவர் பாடசாலைக்கும் பாடசாலை அதிபருக்கும் பாடசாலை மாணவர்களுக்கும் அபகீர்த்தி ஏற்படுத்தும் வகையில் சமூக வலைத் தளங்கள் வாயிலாக செயற்பட்டதாக தெரிவித்தே பெற்றோர் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

ஆசிரியர் சங்கமொன்றினை பயன்படுத்தி தமது சொந்த நலனை அடிப்படையாகக் கொண்டு பாடசாலைக்கு எதிரான செயற்பாடுகளை தொடர்ந்தும் செய்வதாக குற்றம் சாட்டிய பெற்றோர், குறித்த ஆசிரியருக்கு இடமாற்றம் வழங்கவேண்டும் எனத் தெரிவித்தனர்.

சில வாரங்களுக்கு முன்பு குறித்த சம்பவம் தொடர்பாக பாடசாலை மாணவர்களும் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-7,33,104)

## வடக்கு...

நடைபெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர், கொரோனா நோய்த் தொற்று மற்றும் உலகப் பொருளாதார நெருக்கடி காரணமாக இந்நாடு எதிர் கொண்ட பொருளாதார பின்னடைவினால், நாம் முதலில் தயாரித்த திட் டங்களை நடைமுறைப்படுத்துவதில் சிக்கல் நிலை காணப்பட்டது.

எவ்வாறாயினும், தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க முன்னெடுத்த வேலைத்திட்டங்களின் மூலம் நாடு மீண்டும் பொருளாதார ஸ்திர நிலையை அடைந்து வருகிறது.

வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் உள்ள மக்களின் குடிநீர்த் தேவையை பூர்த்தி செய்வதற்காக துரித, இடைக்கால மற்றும் நீண்ட கால அடிப்படையில் நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைமைகளை நிறுவும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

அவற்றில் பெரும்பாலானவைகளின் பணிகள் பூர்த்தி செய்யப்பட்டு வருகின்றன.

சிறுநீரக நோயாளிகள் அதிகமாக உள்ள பிரதேசங்களுக்காக இந்த நனோ தொழில்நுட்ப நீர் சுத்திகரிப்பு முறைகள் பயன்படுத்தப்படவுள்ளன என்றார். (ம-7,9)

## தென்னை...

உள்ளதாக தென்னை அபிவிருத்தி சபையின் வடமாகாண பிராந்திய முகாமையாளர் தேவராசா வைகுந்தன் தெரிவித்துள்ளார்.

கிளிநொச்சியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார். இவ்விடயம் தொடர்பாக அவர் மேலும் தெரிவிக்கையில்,

இன்று சனிக்கிழமை பளை தர்மங்கேணி பகுதியில் தெங்கு அபிவிருத்தி சபையின் ஏற்பாட்டில் பயிற்சி வழங்கும் நிகழ்வு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

வட மாகாணத்தின் யாழ்ப்பாணம், மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு ஆகிய மாவட்டங்களில் உள்ள தென்னை உற்பத்தியாளர்கள் எதிர்கொள்ளும் பல்வேறு வகையான பிரச்சினைகள் தொடர்பான கலந்துரையாடலும் தென்னை செய்கையில் ஆர்வம் உடையவர்களுக்கான ஒரு ஏக்கரில் தென்னை பயிர் செய்வதற்கான மானிய அடிப்படையிலான தென்னை கன்றுகளும், அவற்றிற்கான உரங்களும் வழங்கப்படவுள்ளன.

தற்பொழுது வட மாகாணத்தில் தென்னை செய்கையில்பாரிய வீழ்ச்சி காணப்பட்டுள்ளது.

அதனை நிவர்த்தி செய்யும் வகையில் பல்வேறு பகுதிகளிலும் தென்னை செய்கையை மேற்கொள்ள உள்ளோம்.

அன்றைய தினம் நிகழ்வுக்கு அனைத்து பகுதிகளில் இருந்தும் வருவதற்கான பேருந்து ஒழுங்குகள் அவ்வந்த பிரதேசங்களில் உள்ள சங்கங்களின் ஊடாக ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளன.

இந்நிகழ்வு 9 மணியளவில் ஆரம்பிக்கப்பட உள்ளதால் அனைவரையும் குறித்த நேரத்தில் சமுகமளிக்குமாறும் கேட்டுக் கொள்கின்றோம்" என அவர் மேலும் தெரிவித்தார். (ம-7,9)

## யாழை...

பதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

தர்மன் சண்முகரத்தினம் சிங்கப்பூர் நாட்டின் நிதி அமைச்சராகவும் துணை பாதுகாப்பு அமைச்சராகவும் துணைப் பிரதமராகவும் பதவி வகித்த நிலையில் தற்போது ஜனாதிபதியாக தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

இவருக்கு போட்டியாக ஜனாதிபதி வேட்பாளராக இருவர் களமிறங்கிய நிலையில் இருவரும் 20 வீத வாக்குகளைக் கூட பெறாத நிலை காணப்பட்டது.

இவரது தாய்யாழ்ப்பாணம் ஊரெழுப் பகுதியை பூர்வீகமாகக் கொண்டவர் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-7,9,104)


Lucky 7 — சீட்டிழுப்பு இலக்கம் 0050 — திகதி 2023.09.01 — அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.10,429,935.12 — விருச்சிகம் 8 6 1 4 1 3 0 2 — 1 4 1 9 1 — 0 6 1 6 9 6 2 / 1 3 4 2 8 3 8 / 0 9 5 8 5 9 0 / 0 2 2 3 0 0 8 / 1 0 5 4 7 8 9 / 0 2 2 0 8 9 / 0 0 0 7 4 5 4

மெகா பவர் — திகதி 01/09/2023 — சீட்டிழுப்பு இலக்கம் 1572 — Z 16 26 35 50 55 — 69327

தன நிதானய — திகதி 2023.09.01 — சீட்டிழுப்பு இலக்கம் 1254 — F 06 18 27 30 F — 74465

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3466 — சீட்டிழுப்பு திகதி 01.09.2023 — J 01 32 46 76 — J 00422

HANDAHANA — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — சீட்டிழுப்பு இலக்கம் 533 — மீனம் 11 23 31 48 மீனம்

மஹஜன சம்பத — திகதி 2023/09/01 — சீட்டிழுப்பு இலக்கம் 5224 — R 1 4 3 6 8 6

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2198 — வர்ணம் இளஞ்சிவப்பு — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — தினம் வெள்ளிக்கிழமை — 52 63 71 72 H — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 64,276,132.40 — 16362 — 666

சனிதா — திகதி 2023.09.01 — வெற்றி வாரம் 4359 — வர்ணம் செம்மஞ்சள் — 56 58 61 72 S — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.56,068,856.00 — 62167 — 483

சசிரி — வெற்றி வாரம் 370 — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — பச்சை — 23 39 43 — 09 — வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 3,268,080/-

ராசி — சீட்டிழுப்பு வாரம் 3910 — வர்ணம் கரும் நீலம் — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — தினம் வெள்ளிக்கிழமை — 02 03 04 24 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 7,264,960/- — 24756 — 701

ஜயோதா — திகதி 01.09.2023 — வெற்றி வாரம் 1374 — W 10 13 32 43 51 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 434,822,154.20 — 49716 — 628 — DLB தொலை பேசி : 011-2 333-546-47 Web : www.dlb.lk

அட கோடிபதி ADA KOTIPATHI — வெள்ளிக்கிழமை — வெற்றி வாரம் 2024 — சீட்டிழுப்பு திகதி 2023.09.01 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,312,672/- — 04 27 29 44 D — 53034 — 700


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2ஆம் ஆண்டு

# நினைவஞ்சலி



மண்ணில்
1974 . 11 . 25

விண்ணில்
2021 . 08 . 25

அமரர்

## திரு. சண்முகம் சதீஸ்குமார்

(சீதா ஜுவல்லறி உரிமையாளர்)

திதி : திருதியை

(16895)

ஈராண்டு ஓடி மறைந்தது ஐயா!
உங்கள் அன்பு நிறைந்த முகம்
எம் நெஞ்சங்களை விட்டகலவில்லை!

அன்பென்ற வார்த்தைக்கு
அர்த்தம் தேடினால் அது நீங்களே!
புன்னகை கலந்த உங்கள் அன்பு முகத்தை
இனி எப்போது காண்போம்?

ஈராண்டென்ன?
ஈராயிரம் ஆண்டுகள் ஓடி மறைந்தாலும்
நீங்கள் எம் நெஞ்சங்களில்
நிலையாய் வாழ்வீர்கள் ஐயா!

உங்கள் ஆத்மா சாந்தியடைய
இறைவனை வேண்டுகின்றோம்.

தபாற்கந்தோர் வீதி, சாவகச்சேரி.

குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 02.09.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org